361

6 - JUN 1930

தொகுதி 9.] 1930ளு மேமீ 1வ [பகுதி 4.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
...சாமி முதலியார்,
...ஜெயபுரம், சென்னை.

3c
ஊ2H, N22mm
N30.9.4
186545

# இரத்தினபுரி இரகசியம்

(3 - ம் பாகம்)

ஓர் இனிய தமிழ் நாவல்

ஸ்ரீமான்

ஆரணி - குப்புசாமி முதலியார் அவர்கள்

எழுதியது.

186545

சென்னை

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியாரால்

வெளியிடப்பெற்றது.

1930

காப்பிரைட் ரிஜிஸ்தர்] [விலை ரூபா 2—0—0

PRINTED AT THE
"ANANDA BODHINI" PRESS,
No. 6. LAWER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

JUN 19
MADRAS

# இரத்தினபுரி இரகசியம்

## நான்காம் பாகம்.

### 66-வது அத்தியாயம்.

முன்னுல் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கும் அதே இரவு போலீஸ் பிரதம அதிகாரியின் மாளிகையில் மிக்க சேர்த்தியான விருந்து நடந்துகொண்டிருக்கிறது. போலீஸ் அதிகாரியின் உதவி உத்தியோகஸ்தரும், ராஜாங்க உள்நாட்டு மந்திரியும் ,போலீஸ் அதிகாரியின் தலைமை வேவுகாரரில் மூவரில் மூவருமே அவ்விருந்திற்கு வந்திருந்தார்கள். இரவு சுமார் 10 மணிக்குமேல் ஆகாரம் முடித்து யாவரும் மிக்க உயர்தரமான குடிவகைகளையருந்திக் கொண்டு சந்தோஷமாய்ச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், போலீஸ் உத்தியோகஸ்தரில் ஒருவன் தனது தலைவனை நோக்கி, இரத்தின புரியிலிருந்து மிக்க செல்வவந்தாகிய சுகசிங்கம்பிரபு இன்று இங்கு வருவார் என்று கூறினீர்களே'' என்றுன்.

பிரதம போலீஸ் அதிகாரி "ஆம். அவர் இன்று கட்டாயம் வந்திருப்பார். நமது நகரில் அவர்கள் நாட்டு மந்திரியிருக்கிறுரே அவரால் தடைசெய்யப்பட்டிருப்பார். ஆயினும் பனிரெண்டுமணிக்கு மேலாவது கட்டாயம் வருவதாய்க் கூறினர். ஆச்சு, மணி பதினென்று ஆய்விட்டது. பனிரெண்டுக்குள் வருவார்'' என்றுர்.

ஊ24,M22
N30.9

பிறகு அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையால் கீழ்க் கண்ட சங்கதிகள் வெளியாயின. அவை எவையெனின்:—

பாஞ்சால நாட்டரசன், இரத்னபுரி யரசன் இருவர்க்குள்ளும் ஒருவித ஒப்பந்தம் இருந்தது. அதன்படி இருவரும் ஒருவருக்கொருவர் வேண்டிய உதவியைச் செய்ய வேண்டியதா யிருந்தது. இதனால் இளவரசன் தன் மனைவிக்குச் செய்யத் தொடங்கியிருக்கும் சதியாலோசனையை நிறைவேற்றுவதில் பாஞ்சால துரைத்தனத்தார் உதவி செய்யவேண்டி யிருந்தது. அதனால் அந்த நான்கு சகோதரிகளின் தாயாகிய மரகதம்மாள் கோரிக்கைப்படி சுகசிங்கம் பிரபு இரண்டு வாரத்திற்குமுன் நேரய்ப் பருதிபுரத்திற்கு வந்து பாஞ்சால உத்தியோகஸ்தரிடம் கலந்து பேசி திருப்திகரமான ஏற்பாடு செய்துகொண்டு சென்றார்.

ஜகதீசன் இளவரசிக்கு உதவி செய்யவென்றே தங்கள் நாட்டிற்கு வந்திருக்கும் சங்கதி பாஞ்சால உத்தியோகஸ்தர்களுக்குத் தெரியும். அதனால் வேண்டுமென்றே போலீஸார் ஏதோ ஒரு சாக்குக் காட்டி அவனிடம் இருந்த கடிதங்களை எடுத்துக்கொண்டு அவனைச் சிறைப்படுத்தினார்கள். அவன் கோமளவல்லியை மணம்புரிய விருப்பதும், மீனம்பாள் அவன் ஆதாரணையிலிருப்பதும் யாவும் அவர்களுக்குத் தெரியும். கடைசியாய் ஜகதீசனுக்கும் ஜானகிக்கும் நேர்ந்த சம்பவங்களுக்கெல்லாம் போலீஸ் பிரதம அதிகாரி உளவே யன்றி வேறில்லை''

இவ்விஷயங்க ளனைத்தும் சம்பாஷணையில் வெளியானதே உள்நாட்டு மந்திரி போலீஸ் பிரதம அதிகாரியை நோக்கி "இப்போது இந்த விவகாரத்திற்குப் பூரணமாய் மனமொப்பி வந்த மூன்று சகோதரிகளும் இளவரசியிடம் போய்ச் சேர்ந்தார்களோ?'' என்றார்.

போலீஸ் அதிகாரி:—"மூவரில் ஜானகி தவிர மற்ற இருவரும் அவர்களுக்குப் பாதுகாப்பாய் வந்த இராஜம்மாள் என்ற மூதாட்டியோடு இளவாசியிடம் சென்றிருக்கிறார்கள். சுகசிங்கம் பிரபு இங்கு வந்த மறுநாளே அவர்களை மிக்க அவசரமாய் இளவாசி யிருக்கும் நகரத்திற்கு அனுப்பிவிட்டார். ஆனால் மூவரில் சிறியவளாகிய ஜானகியை மட்டும் தன்னோடு நிறுத்திக் கொண்டார்" என்றார்.

மந்திரி:—"இப்போது ஜகதீசனையும் ஜானகியையும் அவ்வாறு பக்கத் தறைகளில் வைத்திருப்பதால் என்ன அனுகூலமுண்டாகும்?" என்றான்.

போலீ:—"அவன் தான் கந்தபுரியிலிருக்கும் கோமளவல்லி யென்ற கன்னிகையை மணம்புரியப் போவதால் வேறெக்கன்னிகையின் மேலும் காதல்கொள்ள மாட்டேனென்று மிக்க சத்தியவான்போல் நடிக்கிறான். ஆகையால் இப்போது அவன் ஜானகியின் மாயவலையிற் சிக்கிவிட்டால் அவன் கொட்டம் அடியோடடங்கிவிடும். தன் யோக்கியதை யழிந்த பிறகு அவன் எப்படி முகத்தை வைத்துக்கொண்டு இன்னொருவர்க்குப் புத்தி கூறுவான்?

இதுமட்டு மல்ல; இன்னொரு மர்மமான விஷயம் இருக்கிறது. இவன் வைத்துக்கொண்டிருக்கும் ஜகதீசன் என்ற பெயர் உண்மையான பெயரல்ல. இவன் தன் அந்தஸ்தையும் பெயரையும் மறைத்து வைத்துக்கொண் டிருக்கிறான். இப்போதிவன் ஜானகியின் மாயவலையிற் சிக்கிக் கொண்டானென்றே வைத்துக்கொள்வோம். இச்சங்கதியை யிவன் மணம்புரிய ஏற்பாடு செய்திருக்கும் கன்னிகை யுணர்வாளாயின் அதோடு அவர்கள் கலியாண ஒப்பந்தம் உடைந்து போய்விடும்" என்றார்.

மந்திரி:—அப்படியாயின் அவர்கள் கலியாணத்தைப் பற்றி ஆசேஷபம் ஏதேனுமுண்டோ? அது நடக்கக் கூடாதென்று யாருக்காவது விருப்ப மிருக்கிறதோ?

போலீஸ்:—அவனுக்கும் அப்பெண்ணுக்கும் அந்தஸ்தில் தாரதம்மிய மிருப்பதால் அவன் அப்பெண்ணை மணம் புரிய லாகாதென்பது இளவரசன் அபிப்பிராயம். ஆயினும் இப்போது அது இரண்டாவது விஷயமே. இளவரசியைப் பற்றி நடக்க ஏற்பாடா யிருக்கும் சதியாலோசனைக்குப் பங்கம் நேரிட வொட்டாது செய்ய வேண்டு மென்பதே முதல் கோரிக்கை.

போலீஸ் அதிகாரி யவ்வாறு கூறிக்கொண்டே யிருக்கையில் ஒரு வேலைக்காரன் அவரருகில் வந்து அவர் செவிகளில் என்னமோ குசுகுசுவென்று கூறிவிட்டுச் சென்றான். அவன் சென்றதே போலீஸ் அதிகாரி "மிக்க சந்தோஷம். ஜகதீசன் தன் அறையின் சாளரத்தைத் திறந்ததையும் அப்போது சட்டத்திற்கு விரோதமாய் அறையில் தீபம் வைத்துக்கொண் டிருப்பதையும் பாராக்காரன் கண்டு அப்படி தீபம் வைக்கக்கூடாதென்றும் சாளரத்தைத் திறக்கக்கூடாதென்றும் கண்டித்து விட்டு வந்தானும். அதோடு அந்த அறையில் ஒரு ஸ்திரீ யிருந்ததையும் அவன் கண்டானும்" என்றார்.

இவர்கள் இவ்வாறு பேசிக்கொண் டிருக்கையில் இன்னொரு ஆள் வந்தான். அவன், போலீஸ் அதிகாரியின் செவிகளில் என்னமோ கூறினன். அவன் சென்றதே உத்தியோகஸ்தர் தன் நண்பர்களை நோக்கி "இதோ சுகசிங்கம் பிரபு வந்துவிட்டார்" என்றார். அதற்குள் அப்பிரபுவும் அறைக்குள் வந்துவிட்டார். போலீஸ் அதிகாரி அவரை மற்றபேர்க்கு அறிமுக மாக்கியபின் க்ஷேமலாபங்களை விசாரித்தார்.

கடைசியில் இருவரும் தங்கள் சதியாலோசனை விஷயத்தைப் பற்றி பேசத் தொடங்கினார்கள்.

போலீஸ் அதிகாரி நடந்த சங்கதிகளைக் கூறி, "விஷயம் இப்போது பூரண ஜெயமோ அல்லது அடியோடு அபஜெயமோ அடையும் நிலைமையிலிருக்கிறது" என்றார்.

பிரபு:—நான் ஒரு ஆசாமியை என்கூட அழைத்து வந்திருக்கிறேன். ஜகதீசன் நெறிதப்பி விட்டான் என்பதை யவன் காதலியாகிய அவள் கண்ணால் காண வேண்டும்.

போலீஸ்:—ஓகோ! கோமளவல்லியைக் கூடவே யழைத்து வந்தீரோ?

பிரபு:—ஏன் ஒரே குண்டில் இரண்டு பட்சியைக் கொல்லலாமல்லவா?

போலீஸ்:—ஆம். ஆம். ஜகதீசன் அவளை மணம் புரிவது தடைப்படுவதோடு, இளவரசிக்காகச் செய்திருக்கும் ஏற்பாட்டிற்கும் ஒரு இடையூறும் நேரிடாது. ஆயினும் அவள் மிக்க அபூர்வமான வனப்புடையவளென்று கேள்விப்பட்டேன். எனக்குத் தாங்கள்கொஞ்சம் சந்தர்ப்பம் அளித்தால் அவள் அன்பைப் பெற முயற்சி செய்யவேண்டுமென நான் மிக்க ஆவலுடையவனா யிருக்கிறேன். ஏனெனில்,......................

சுகசிங்கம் பிரபு புன்னகையோடு "நண்பரே அது சாத்தியமாகக்கூடிய தல்ல. ஏனெனில், அவள் மிக்க நெறியோடிருப்பவள். வனப்பிலும் அபூர்வமான வனப்புடையவள். ஆகையால் அத்தகைய பெண்மணியின் காதலைப் பெறவேண்டுமென்று நானே மிக்க ஆவலுள்ளவனாயிருக்கிறேன். இப்போது ஜகதீசன் அறையைச் சாடை

யாய்ப் போய்ப் பார்ப்போம்" என்று கூறிக்கொண்டே ஆச னத்தை விட்டுக் கிளம்பினர்.

போலீஸ்:—"நீர் அழைத்துவந்த அக்கன்னிகை எங்கே யிருக்கிறாள்?"

சுகசிங்:—"நபன் இங்கு வரும்போது அவளைக் கூடவே யழைத்துவந்து அதோ அந்த முன் அறையிற் குந்த வைத்திருக்கிறேன்" என்றார்.

போலீஸ் அதிகாரி உடனே தன் நண்பர்களை நோக்கி, "நண்பர்களே! நாங்கள் இருவரும் சிறைச்சாலைக்குள் செல்ல வேண்டும். அங்கு பலபேர் போகக்கூடாது. ஆகையால் நீங் கள் சற்றுநேரம் என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நாங் கள் துரிதமாகவே திரும்பி வருவோம்" என்று கூறினர்.

அதன் பிறகு போலீஸ் அதிகாரியும், சுகசிங்கம் பிரபு வும் அங்கிருந்து புறப்பட்டுக் கோமளவல்லி யிருக்கும் அறைக்குச் சென்றார்கள். பிரபு அவளை நோக்கி, "குழந் தாய்! இவர்தான் இந்நாட்டின் பிரதம போலீஸ் அதிகாரி. மிக்க சத்தியவானாகிய பெரிய மனிதர். நீ மிக்க யோக்கிய னாகிய காதலனென்று நம்பி யிருக்கும் ஜகதீசன் எத்தகைய அயோக்கியமான செயல்களுக்காக சிறை செய்யப்பட் டிருக்கிறான் என்பதை அவர் உள்ளபடி கூறுவார்' என்றார்.

நேயர்களே! இந்த இரண்டு சண்டாளர்களும் அக் கன்னிகைக்கும் அவள் காதலனுக்கும் முழு விரோதத்தை யுண்டாக்க எண்ணங்கொண்டு செய்த அக்கிரமங்களை விவ ரித்துக் கூறின் சாதுவுக்கும் கோபம் உண்டாய்விடும். சுருக்க மாய்ச் சங்கதியைக் கூறுகிறோம்.

ஜகதீசன் மிக்க அயோக்கியமான நடக்கைகளை யுடை யவனென்றும், மாறுபெயர் வைத்துக்கொண்டு உலவும்

கள்ளனென்றும், அத்தகைய துஷ்டச் செயல்களுக்காகவே சிறை செய்யப்பட்டிருக்கிறான் என்று அவள் நம்பும்படி கூறினார்கள்.

பாபம் கள்ளங் கபடற்ற அக்கன்னிகை இத்துஷ்டர் பேசிய தந்திரமும் நயவஞ்சகமுமாகிய வார்த்தைகளால் அடியோடு மோசம்போய், இவர்கள் கூறிய மொழிகளைச் சத்திய வாக்காய் நம்பிக்கொண்டாள்.

அந்த அயோக்கியர்கள் "குழந்தாய்! உன் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்க நாங்கள் பலவந்தப் படுத்தப்பட்டதற்காக மிக்க விசனப்படுகிறோம். அதற்காகவே உண்மையான விவரங்களைக் கூறாமல் மேல்போக்காய்க் கூறி யிருக்கிறோம். மாறுபெயர் வைத்துக்கொண்டு உன்போன்ற கபடற்ற கன்னியர்களை வஞ்சித்துக்கொண்டு திரியும் ஜகதீசன் என்பவனைக் கைதுசெய்த காரணமும் அவனைப் பற்றிய விவரங்களும் இதோ இப் பதிவு புத்தகத்தி லிருக்கிறது. அவன் உண்மைப் பெயரும் சரித்திரமும் நீ கேட்டால் இன்னும் அதிக வியாகூலப்படுவா யென் றஞ்சி அவற்றை நாங்கள் கூறவில்லை. இதோ இப்புத்தகத்தி லிருக்கும் குறிப்புகளைக் கொஞ்சம் வாசித்தால் அவன் செய்கைகளைக் கொஞ்சம் அறிந்துகொள்ளலாம்'' என்று கூறிக்கொண்டே போலீஸ் அதிகாரி தன் கரத்திலிருந்த புத்தகத்தைத் திறக்கப் போனார்.

கோமளவல்லி:—"அந்தோ! வேண்டாம் வேண்டாம். நான் இதுகாறும் கேட்டவைகளே போதும். இன்னும் ஒரு வார்த்தைகூட அதைப்பற்றிக் கேட்க எனக்குப் பிரியமில்லை. அய்யோ! கடவுளே! இத்தகைய மனோவேதனைப் படுவதைவிட நான் மடிந்துபோவது எவ்

வளவு நலமாயிருக்கும்'' என்று கண்களில் நீர் துளித்துப் பரிதபித்தாள்.

நேயர்களே! இக்கன்னிகையின் மனோவியாகூலம் இத்தகையதென நாம் விவரித்துக் கூற முடியாது. இவள் யோக்கியமானவளென்றும், அச்சம், மடம், நாணம்,பயிர்ப்பு முதலிய குணங்களைப் பூரணமாகவுடைய உத்தமமான கன்னிகை யென்றும் நாம் அறிவோமல்லவா? அப்படி யிருந்தும் பாபம் இவள் முன்னமே அகாரணமாய் யனுபவித்த கஷ்ட நஷ்டங்களையும், இப்போ தனுபவிக்கும் கொடிய மனோவேதனையையும் என்னென்று அளவிட்டுக் கூறலாகும் சாதாரணமாய் அவளைப்பற்றி ஒரு விஷயமுமறியாத ஒருவன் அவள் பட்ட இத்துன்பங்களை மட்டும் கேள்விப்படுவானேல், அவளால் ஏதேனும் குற்றம் நடந்திருக்கலாகும் என்றே கருதுவான். ஆனால் உண்மையில் அவள் பூரண நிரபராதியே. இத்தகைய வினைக்கே பிராரப்தவினை யென்று கூறுவது.

அப்படி யிருந்தும் உலகமுறைமையாய் வெளித்தோற்றத்தை மட்டும் கவனித்தால், அவள் சகல நற்குணங்களையும் உடையவளாயினும் அவளிடம் ஒரு குறை யிருக்கிறதென்றும், அவள் இத்தகைய இக்கட்டுகளில் சிக்கிக்கொண்டதற்கு அதே காரணமென்றும் கூறலாகும். அதாவது அவளுக்கு உலக அனுபவம் கொஞ்சமுமில்லை என்பதே. கபடற்ற எவரும் சுலபத்தில் ஏமாற்றப்படுவார்கள். தந்திரமாய் வெளிக்குப் பட்சமுடையோர்போல் தங்களிடம் பேசுவோரைப் பூரணமாய் நம்பிவிடுவார்கள். இதனால்தான் ஒருவன் கல்வி கற்றிருந்தாலும், யோக்கியனு யிருந்தாலும் உலக அனுபவம் தெரியாவிட்டால் அவனிடம் சில குறைகளிருந்தே தீரும் என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

ஆகையால் சாதாரணக் கல்வி கொஞ்சம் கற்றுவிட்டதினுலேயே ஒருவன் தன்னிலும் அக் கல்வி கொஞ்சம் குறைவாயிருப்போரின் உலக அனுபவத்தைக் கவனியாது அவர்கள் நற்போதனைகளை யலட்சியம் செய்வது அறிவின்மையென்றுணரவேண்டும்.

கோமளவல்லி, தன் காதலன் விஷயத்தைப் பற்றி தான் கேட்டவரையில் போதுமென்று கூறியும் போலீஸதிகாரியும் சுகசிங்கம் பிரபுவும் அவளை நோக்கி,

"குழந்தாய்! இவ்விஷயத்தில் உன் மனதிற்கு வருத்தத்தை யுண்டாக்க எங்களுக்கு எவ்வளவோ துயரமாயிருந்தாலும், உன் மனதிற்கு உண்மைப் பிரத்தியட்சமாய்ப் புலப்படும் வண்ணம் செய்யவேண்டுமென்று கருதுகிறோம். உன்னைப் போன்ற கபடற்ற கன்னிகைகள் சுலபமாய் ஏமாந்து போவது சகஜமே. ஆகையால் எதையும் பிரத்தியட்சமாய்க் கண்டால்தான் மனதில் உண்மை உறுதியாய்ப் படும். ஆகையால் இவ்விஷயத்தைப் பற்றிய கடைசிக் காட்சியை மட்டும் சற்று வந்து நீ காணவேண்டும். எங்களோடு கொஞ்ச தூரம் வரவேண்டியதே யன்றி வேறு கஷ்டமில்லை" என்று அவளைச் சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

அத்துஷ்டர்கள் அவளை ஜகதீசன் இருக்கும் அறைக்குப் பக்கத்திலிருந்த அறைக்கு அழைத்துப்போய், அங்கிருந்த ஒரு சிறு கள்ளச் சாளரத்தைத் திறந்து காட்டினார்கள். அச்சமயம், அந்த அறையில் மங்கலாய் ஒரு தீபம் எரிந்துகொண்டிருந்தது. கோமளவல்லி உன்னிப்பாய் அந்த அறைக்குள் பார்ப்பதற்குள் "ஓ! நீ என்னைப் பைத்தியக்காரனாக்கிவிடுவாய்" என்று சத்தம் கேட்டது. அது தன் காதலன் குரலே யென்று அறிந்த கோமளவல்லி சொல்லொணு வியாகுலத்திற்காளாகி ஆவி சோர்ந்தாள்.

அதற்குள் "ஓ ஜகதீசா! ஜகதீசா! நான் உன்னை என் உயிரைவிட அதிகமாய் நேசிப்பது நீ யறிந்த சங்கதி தானே" என்று ஒரு ஸ்திரீயின் குரல் அவள் செவிகளில் கேட்டது. அக்குரலால் அவள் வாலிப மாதென்றும் தெரிந்தது.

கோமளவல்லி தட்சணம் தன் மனத்துயரைத் தாங்க முடியாமல் "அய்யோ தெய்வமே" என்று கூவியதும் அடியற்ற மாம்போல் மூர்ச்சை யடைந்து பூமியில் விழுந்து விட்டாள். இச்சண்டாளர்கள் போதித்த நயவஞ்சகப் வேதனையைக் கேட்டு அவள் மனம் அடைந்திருக்கும் வேதனையால் தான் கேட்ட சங்கதிகளைச் சிந்தித்துப் பார்த்து உண்மை யறிந்துகொள்வோ மென்றாவது, நம் காதலன் இவ்வளவு சமீபத்திலிருக்கிற வரையில் அவனை நேரில் கண்டு பேசி உண்மையை யறிவோமென்றாவது அவள் மனதிற்குப் புலப்படவில்லை.

அவள் இட்ட சத்தம் ஜெகதீசனுக்குக் கேட்டதோடு அவள் குரலும் தெரிந்துவிட்டது. அவன் உடனே கோவென்றலறிக்கொண்டு தீபத்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்த சிறு சாளரத்தின் வழியாய்ப்பார்த்தான். அச்சமயம் ஸ்மரணையற்று விழுந்திருக்கும் கோமளவல்லியைப் போலீஸ் அதிகாரி இருகரங்களாலும் தூக்கிக்கொண்டு போவதைக்கண்டான். தீபவொளியால் அவள் முகத்தையும் பார்த்துவிட்டான்.

கடவுளே! அவன் மனதில் உண்டான வியாகூலத்திற்கு ஓர் அளவில்லை. அதை இன்னவிதமென்று கூற ஒருவராலும் முடியாது. அவன் உள்ளே திரும்பியதும், ஜானகியை நோக்கி மிக்க வெறுப்போடும் கோபத்தோடும் "ஓ சண்டாளப் பேயே! என் ஜன்ம விரோதியே! என் குடியை

யடியோடு கெடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டாயே. என் உயிருக்குயிரான காதலியின் மனமே என் விஷயத்தில் முறிந்துபோம்படி செய்துவிட்டாயே படுபாவி! சண்டாளி! ஆண்டவனே!" என்று ஒரு பயங்கரமான கூச்சலிட்டதும் சவம்போல் பூமியில் வீழ்ந்துவிட்டான்.

அவன் தேகம் அசைவற்று மூச்சடங்கிவிட்டது. இதைக்கண்ட ஜானகி "அய்யோ தெய்வமே! நானே இவனைக் கொன்ற பாதகியாய் விட்டேன்" என்று புலம்பத் தொடங்கினாள்.

* * *

* * * *

நேயர்களே! நமது துரைத்தனக் கொலையாளியாகிய தானப்பனைப் பற்றி இப்போது கூறவேண்டியதாயிருக்கிறது. தேவராயனைத் தூக்கிற்போட யாரும் முன் வராதபோது இவன் அந்த வேலைக்கு ஒப்புக்கொண்டதால் அதற்குமுன் செய்த எவ்விதக் குற்றத்திற்கும் மன்னிக்கப்பட்டான் என்பது நேயர்கள் அறிந்ததே. அவன் ஒருநாள் காலை எட்டு மணிக்கு நாணயமாய் உடையணிந்துகொண்டு காமாட்சியிடம் தான் வெளியில் செல்வதாய்க்கூறி எனக்கு ஒரு கிண்ணத்தில் சாராயம் கொண்டுவா!" என்றான்.

காமாட்சி:—இவ்வளவு காலையில் வெளியில் எங்கே போகப்போகிறாய்?

தானப்:—நான் செல்வநாதனைக் காணப்போகிறேன்.

காமாட்சியும் அவள் சகோதரனாகிய இராசப்பனும் ஒரே குரலாய்,

"அந்தோ! அவனால் பட்டகஷ்டங்கள் போதாதா. மறுபடி யவனிடம் செல்லலாமோ" என்றார்கள்.

தானப்:—முன்போல் நான் செல்வநாதனுக்குப் பயப்பட வேண்டியதில்லை. பூரண மன்னிப்புப் பத்திரம் என் கையிலிருக்கிறது. முன்பு நான் உயிருக்குப் பயந்து கொண்டு தலைமறைந்துகொண் டிருக்கையில் செல்வ நாதன் நான் உயிரோடிருக்கிற சங்கதியை யறிந்து கொண்டு தான் எனக்காக நான் வழக்கமாய்ச் செல் லும் இடங்களிலெல்லாம் தன் ஆட்களைக் காவல்வைத் திருக்கிருன். ஆயினும் நான் உயிரோடிருக்கும் சங்க தியை யவனுக்குக் கூறியது யாரென்று எனக்குத் தெரியும்'' என்ருன்.

காமா:—"யார் அந்த இரகசியத்தைக் கூறியது? நமது ஜனகன் அல்லவே?'' என்ருள்.

தானப்:—இல்லை இல்லை. ஜனகன் சத்தியவான். நான் அன்று இரவு கொள்ளையினின்று உயிர் தப்பியபின் முதலில் யார் வீட்டிற்குச் சென்றேன். தேவதாஸ் வீட்டிற்குத்தான். அன்று செல்வநாதன் அந்த வீட் டிற்கு வந்திருந்தபோதே அவனை யங்கேயே ஒழித்து விடலாமென்று நான் கூறினேன்; அவனே அதற்கு ஒப்பவில்லை. நமது கட்சியைச் சேர்ந்த நண்பர்களா யிருந்தாலும் இந்தத் துப்பறியும் சண்டாளர்கள் அவர் களில் ஒருவனைச் சந்தித்தால் அவனை யெந்தவிதத்தி லாவது மயக்கிவிடுகிருர்கள். அதனுலவர்கள் தங்கள் நண்பர்களைக்கூடக் காட்டிக் கொடுத்துவிடுகிருர்கள்.

இராசப்பன் "அப்படித்தான் இருக்கும்'' என்ருன்.

தானப்பன் உடனே தன் உடைகளை யணிந்துகொண்டு புறப்பட்டவன் தட்டென்று நினைத்துக்கொண்டு இராசப் பனை நோக்கி, "ஆ! மறந்துவிட்டேன். எதற்கும் என் ஆயு தங்கள் என்னிடம் இருக்கவேண்டும்'' என்ருன்.

உடனே இராசப்பன் ஒரு அறைக்குள் சென்று, ஒரு பெட்டியைத் திறந்து, கள்ளச் சாவிகளடங்கிய ஒரு சாவிக் கொத்து, ஒரு சிறு கடப்பாறை, ஒரு மெழுக்குண்டை, கண்ணாடியை யறுக்கும் ஒரு கருவி முதலிய யாவற்றையும் எடுத்து தானப்பனிடமளித்தான். அவன் தான் அணிந்திருக்கும் பெரிய உள் அங்கியில் யாவற்றையும் மறைத்து வைத்துக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டான்.

அவன் அங்கிருந்து நேராய் செல்வநாதன் வீட்டை நோக்கிச் சென்றான். அங்கு சென்றதும் செல்வநாதனுடைய வீட்டுக் காரியஸ்தியும் வேலைக்காரியுமாகிய அம்மாதே யங்கிருந்தாள். தானப்பன் யாரென்று அவளுக்குத் தெரியாது. ஆயினும் அவன் முகத்தைப் பார்த்தாலே ஒருவரும் வெறுப்படையாதிருக்கமாட்டார்கள்.

தானப்பன் செல்வநாதர் இருக்கிறாரா வென்று கேட்டதற்கு "அம்மாது இல்லை அவர் வெளியில் சென்றிருக்கிறார்" என்றாள்.

தானப்:—அந்தோ! நான் முக்கியமான விஷயத்தைப் பற்றி அவரிடம் பேசவேண்டும்.

வேலைக்காரி:—அப்படியானால் நீ யார்?

தானப்:—"நான் நியாயாதிபதியின் ஆபீஸி லிருப்பவன்" என்று கூறிக்கொண்டே தான் என்னமோ செல்வநாதனுடைய தொழிலுக்கு உடந்தையா யிருப்பவன்போலவும் அவனுக்குச் சகாயம் செய்பவன்போலவும் சமிக்கை காட்டிப் பேசினான்.

அந்தோ தந்திர சாமர்த்தியங்களைக் கற்ற ஒரு முதல் தரமான கள்ளப்பயல் ஸ்திரீகளை ஏமாற்றுவது மிக்க சுலபமல்லவோ!

ஒரு சூது மறியாத அம்மாது "இவன் நியாயாதிபதி ஆபீஸில் இருப்பவன்போலும், செல்வநாதன் தன் காரியத்திற்காக இப்படிப்பட்டவர்களை வசியம் செய்துவைத்திருப்பதுண்டு. அவர்களில் இவன் ஒருவனுயிருக்கலாகும்" என்று கருதிக்கொண்டு, தானப்பனை நோக்கி,

"அப்படியானல் உள்ளேவந்து உட்கார். அவர் சீக்கிரத்திலே வந்துவிடுவார்" என்று கூறி, அவனை யழைத்துச் சென்று போஜன அறையில் உட்காரவைத்து உபசாரம் செய்தாள்.

தானப்பன் அந்த விடத்திலேயே சுமார் முக்கால் மணி நேரம் உட்கார்ந்திருந்தான். அவனுக்கும் சலித்துவிட்டது. கடைசியில் இச்சமயம் திரும்பிச்செல்வோம் என்று தீர்மானித்துக்கொண்டு எழுந்தான். வீட்டில் ஒரு சந்தடியும் புலப்படவில்லை. ஏனெனில் வேலைக்காரி கீழ்க்கட்டில் சமையலறையில் வேலையாயிருந்தாள். அவன் சந்தடியுண்டாக்கவேண்டித் தன் கால்களால் பூமியைத் தட்டினன். ஒருவரும் பேசவில்லை. அதனல் மேலேயிருக்கும் மாடிக்கேறினன். அங்கு தாழ்வாரத்தில் ஒரு அறை பூட்டப்பட்டிருந்தது. அதில் என்ன இருக்கிறது பார்ப்போமென்று அவன் சுபாவகுணம் தூண்டியது. அதன்மேல் அவன் தன்னிடத்திலிருந்த கள்ளச்சாவிகளில் ஒன்றல் அதைத் திறந்து உள்ளே சென்றன்.

அந்த அறையிலுள்ள காட்சியைக் கண்டதே தானப்பன் பிரமித்து நின்றுவிட்டான். ஏனெனில் அந்த விசாலமான அறையின் நான்கு பக்கச் சுவர்களிலும் இரண்டு வரிசைச் சட்டங்கள் ஒழுங்காய் அடிக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒவ்வொருவிதமான உடைகளிருந்தன. அதாவது அந்த அறைக்குள் பணக்காரன் முதல் பிச்சைக்காரன்

வரையில், வர்த்தகன், தட்டான், வண்ணான், நாவிதன் குயவன், கூலிவேலைக்காரன், வண்டிக்காரன், ஹாக்கர், தையற்காரன் முதலிய ஒவ்வொருவரும் அணியத்தக்க உடைகளும், அவர்கள் கையாளவேண்டிய ஆயுதங்கள் முத லிய கருவிகளும் யாவும் பூரணமாய் இருந்தன. ஆள் உய ரத்திற்கு ஆறங்குலம் அதிகமான நிலைக்கண்ணாடி யொன்று ஒருபக்கம் வைக்கப்பட்டிருந்தது. தானப்பன் நமது துப் பறியும் நிபுணனாகிய செல்வநாதனுடைய மாறுவேட சாமார்த்தியங்களைக் கண்டு திப்பிரமை யடைந்து சற்று நேரம் கழித்து அங்கிருந்து இன்னொரு அறைக்குச் செல் லும் வழி இருப்பதைக்கண்டு அக்கதவையும் திறந்து அந்த அறைக்குள் சென்றான்.

அந்த அறையிலோ வரிசையாய்ச் சில மேஜைகளும், கண்ணாடிக் கதவுகள் வைக்கப்பட்ட மூன்று பீரோக்களும் இருந்தன. இவைகளில் இருபத்திரண்டு வயதுடைய ஒரு வாலிபனுக்கு எம்மாதிரி மீசை யிருக்குமோ அம்மாதிரி மீசை முதல் நூறு வயதிற்கு மேற்பட்ட வயோதிகன் மீசை வரையில் அங்கு வரிசையாய்த் தொங்கவிடப்பட்டிருந் தன. தாடிகளும் அப்படியே. மனிதர்கள் ரோமம் பலவித மாயிருப்பதுண்டு. அவ்வாறே ஒவ்வொன்றிலும் பல நிறங் களையுடைய மீசை தாடிகள் இருந்தன. அவ்வாறே வயதிற் குத் தக்கபடி பல நிறங்களில் மாறுவேடத்திற்குத் தகுந்த பொய்ச்சிகைகளு மிருந்தன. அந்த அறையில் சுவர்களில் வயதிற்கும் அந்தஸ்திற்கும் தொழிலுக்கும் தக்கபடி எல்லா வித ஸ்திரீகளின் உடைகளும் வரிசையாய் மாட்டித் தொங்க விடப்பட்டிருந்தன. அங்கும் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி யிருந்தது. அங்கும் அந்த அறையிலிருந்து இன்னொரு அறைக்குச் செல்லும் ஒரு வாசற்படி இருந்தது. அக்கதவும் பூட்டப்பட்டே இருந்தது.

இவற்றைக் கண்டபின் தானப்பன் பின்னும் வியப் படைந்து எந்த சமயத்தில் யாராவது திடீலென்று வந்து விடுவார்களோ வென்றதையும் மறந்து, அந்தக் கதவையும் திறந்து உள்ளே சென்றான். அந்த அறையில் ஒரு மனிதன் தன் நிறத்தை மாற்றிக்கொள்வதற்கு வேண்டிய பலவித வர்ணங்களும் அந்த வேலைக்கு வேண்டிய கருவிகளும் பூரணமாய் வைக்கப்பட்டிருந்தன.

இங்கு அவனுக்கு மிக்க வியப்பை யுண்டாக்கத்தக்க வஸ்துக்கள் இருந்தன. முதலாவது ஒரு பெரிய மேஜை மேல் அவன் இதுகாறும் கண்டிராத அவ்வளவு பிரமாண்ட மான புத்தகங்கள் பத்து பனிரெண்டிருந்தன. தானப்பன் அவற்றை ஒவ்வொன்ருய்த் திருப்பிப்பார்த்தான். ஒரு புத் தகத்தில் அட்டவணை மட்டுமே யிருந்தது. அதில் எழுத்துக் கிரமப்படி இரத்தினபுரியிலுள்ள போக்கிரிகள், துஷ்டர், கள்ளர், கொலையாளிகள் இவர்கள் பெயர்களெல்லாம் வரி சைக் கிரமப்படி வரையப்பட்டு அதற்கு நேராய் அப் பெய ரையுடைய ஆட்களின் சரித்திரம் எழுதப்பட்டிருக்கும் புத் தகத்தின் நம்பரும், பக்கத்தின் நம்பரும் குறிக்கப்பட்டிருந் தன. அதில் தன் பெயரைப்பற்றிய குறிப்பு எழுதப்பட் டிருக்கும் பக்கத்தைத் திறந்துபார்த்தான். உடனே பேரிடி விழுந்தமாதிரி ஆவிசோர்ந்து அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்துவிட்டான்.

ஏனெனில் "தன் சங்கதி யொன்றுமே செல்வநாத னுக்குத் தெரியாது. நம்மேல் அவனுக்குச் சந்தேகம் கொஞ் சமுமில்லை" என்று இதுகாறும் எண்ணியிருந்தான். இப் போதே நெடுநாளாகவே இவன் நமது சங்கதிகள் யாவும் அறிந்துகொண்டிருப்பதோடு நம்மேல் கண்ணோக்கம் வைத் திருக்கிருனென்றும் தெரிந்துவிட்டது.

அதே அறையில் வேறொரு பெரிய மேஜைமேல் சில புத்தகங்களிருந்தன. அவற்றைப் பார்த்தபோது அவற்றில் இரத்தினபுரியில் கள்ளர் கொலையாளிகள் முதலிய துஷ்டர்கள் கூட்டமாய்க் கூடும் ஒவ்வொரு இரகசிய விடங்களும், அங்கு எந்தெந்த காலங்களில் எந்தெந்த ஆசாமிகள் கூடுகிறார்கள், கூடி என்ன செய்கிறார்கள், கள்ளச் சொத்துகளை வாங்குகிறவர்கள் அங்கங்கு யாரார் இருக்கிறார்கள், அவர்களுடைய சரித்திரங்களின் சுருக்கம், அவர்கள் அடையாளம் வாசஸ்தலம் முதலிய யாவும் விவரமாய் வரையப்பட்டிருந்தன.

யாவற்றையும் கண்ட தானப்பன் அடைந்த வியப்பும் திகிலும் சொல்லத்தரமன்று. அந்த அறையிலும் வேறொரு அறைக்குச் செல்லும் வழியிருந்தது. தானப்பன் சற்று கஷ்டத்தோடேயே அக்கதவிலிருந்த பூட்டைத் திறக்க வேண்டியதா யிருந்தது.

அந்த அறையிலும் புத்தகங்களே இருந்தன. அவற்றில் செல்வநாதன் தன் சொந்தச் செயல்களை நடந்தது நடந்தபடி எழுதி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் கொஞ்சம் வாசித்ததோடு செல்வநாதனுடைய சாமர்த்தியங்களையும், தந்திரத்தையும், துணிகரத்தையும் கண்டு மிக்க பிரமிப்படைந்தான். இப்புத்தகங்களை வாசித்ததால் தானப்பன் இன்னொரு விசேஷத்தை யுணர்ந்தான். அதாவது மாகதவல்லி வீட்டில் தான் களவுசெய்ய யோசித்திருந்ததை வேறு யாரும் செல்வநாதனுக்குக் கூறவில்லையென்றும், அவன்றான் சாணைபிடிப்பவன்போல் மாறுவேட மணிந்து வந்து ஹோட்டலில் ஒரு நாட்டுப்புறத்தானைப்போ லிருந்து யாவு மறிந்துகொண்டவனென்றும், ஜாடித்தீவிற்கு வந்து கிழநரியை ஏமாற்றி, அப்பெண்ணை மீட்டு நாம் அவன்

இறந்தானென்று அகழியிலெறிந்து விட்டபின் எப்படியோ தப்பித்துக் கொண்டுபோய் விட்டவனென்றும், அவனே ஒரு கிழவியைப்போல் வேடமணிந்து அன்று கொள்ளை நடந்த தினம் தேவாரயன் வீட்டில் தான் ஒளிந்திருந்து பிறகு தன் பழைய நண்பன் வீட்டில்வந்து இராசப்பனையும் காமாட்சியையும் சந்தித்தபின் வெளியில் சென்றபோது தன்னைப் பார்த்து தான் உயிரோடிருப்பதை யறிந்துகொண்டு, தான் வழக்கமாய்ச் செல்லுமிடங்களி லெல்லாம் காவல்வைத்திருக்கிறானென்றும், இதனால் தான் முதலில் கருதியபடி தன் நண்பன் தன்னைக் காட்டிக்கொடுக்கவில்லை யென்றும் அறிந்துகொண்டான்.

அதற்குள் நெடுநேர மாய்விட்டதால் இனியும் இங்கிருப்பது ஆபத்தென்றுணர்ந்து உடனே வந்தவழியே திரும்பித் தான் திறந்த அறைகளை யெல்லாம் பூட்டிக்கொண்டு கடைசியில் வேலைக்காரியால் தான் உட்கார வைக்கப்பட்ட அதே அறையில் வந்து உட்கார்ந்தான். ஆனவரையில் அவன் அச்சமயமே வந்துவிட்டது நற்காலமாய்விட்டது. ஏனெனில் அவன் அங்கு வந்து உட்கார்ந்த மறுநிமிடமே வேலைக்காரி அறைக்குள் வந்தாள்.

அவள் வந்ததும் தானப்பனை நோக்கி, "இப்போது தான் செல்வநாதனிட மிருந்து சமாசாரம் வந்தது. அவனுக்குத் திடீலென்று ஏதோ அவசரவேலை நேரிட்டதால் எப்போது வீட்டிற்கு வரக்கூடும் என்பதைப்பற்றி கூற முடியாதென்றும் ஆகையால் நான் தனக்காகக் காக்க வேண்டாமென்றும் ஒருவனிடம் சொல்லி யனுப்பினான்." என்றாள்.

தானப்:—"சரி அம்மா! அப்படியாயின் நான் வீணாய்க் காத்திருக்க வேண்டியதில்லை. போய் வருகிறேன்" என்றான்.

வேலைக்:—"சரி, அப்படியானல் யார் வந்து போனதாய் நான் கூறுவது?" என்ருள்.

தானப்பனுக்குத் தன் பெயரைக் கூறப் பிரியமில்லை. ஆனல் வேலைக்காரி தன் அடையாளங்களைக் கூறியதே செல்வநாதன் எப்படியும் அறிந்துகொள்வானுதலால் நாமே யுண்மையைக் கூறிவிடுவோமென்று கூறிவிட்டான்.

இவன் யாரென்றறிந்ததே யம்மாது மிக்க வெறுப்பும் சந்தேகமும் கலவரமு மடைந்தாள். ஆயினும் யாவற்றை யும் மனதி லடக்கிக்கொண்டு அவனுக்கு விடைகொடுத் தனுப்பினுள்.

* * * * *
* * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த அதே இரவு சுமார் 8-மணிக்கும் 9-மணிக்கும் இடையில் தானப்பன் ஜாடித் தீவில் பக்கிரி பொன்னன் வைத்திருக்கும் இருட்டுக் கூண்டு என்ற ஹோட்டலுக்குச் சென்று கதவைத் தட்டினன். பொன்னன் உடனே வந்து யார் கதவைத் தட்டுகிறதென் ருன். தானப்பன் தன் பெயரைக் கூறியதே பொன்னன் "ஆ! வா வா!" என்று கதவைத் திறந்தான்.

தானப்பன் கதவு திறக்கப்பட்டதே தன் நண்பனுகிய பக்கிரி பொன்னனை நோக்கி "யாராவது வந்திருக்கிருர் களா?" என்ருன். பொன்னன் இன்னும் ஒருவரும் வர வில்லை யென்ருன். தானப்பன் "மிக்க நலமாயிற்று. ஏனெ னில் நான் உன்னிடம் சில விசேஷ இரகசியங்களைப் பற்றி பேசவேண்டும்" என்ருன்.

உடனே தெரு வாசற்படியைத் தாளிட்டுக்கொண்டு இருவரும் மிக்க இரகசியமான ஒரு அறைக்குள் சென்று சாராயம் குடித்துக்கொண்டே சம்பாஷித்தார்கள்.

பக்கிரி பொன்னன்:—சங்கதி யென்ன இனிக் கூறு பார்ப்போம்.

தானப்:—ஏன்? என் நண்பனே இன்று நான் ஒரு பெரிய இரகசியத்தைக் கண்டுபிடித்தேன். அது என்னையும், உன்னையும், நமது நண்பர்களையும், கூட்டத்தாரையும் பற்றியது.

பக்கிரி:—இதென்ன நீ கூறுவது எனக்கு மிக்க வியப்பாயிருக்கிறது. ஒன்றும் விளங்கவில்லை,

தானப்:—இந்த ஊரில் ஒரு மனிதன் இருக்கிறான். அவன் நாற்புறமும் சுற்றிலும் ஒரு பிரம்மாண்டமான வலை வீசி யிருக்கிறான். சிலந்திப்பூச்சி தன் வலையை வீசி விட்டுத் தான் அதன் மத்தியில் உட்கார்ந்துகொண்டு தன் வலையிற் சிக்கிக்கொள்ளும் ஈக்களைத் தனித்தனியாகவோ, ஐந்தாறாகவோ, பத்து பனிரண்டாகவோ தன் பிரியப்படிப் பிடித்து அழித்துவிடுகிறதே அது போல் அம்மனிதன் நம்மையும் நம்மவர்களையும் அழிக்கக் காத்துக்கொண் டிருக்கிறான்.

பக்கிரி:—நீ கூறுவது எனக்கு விடுகதைபோ லிருக்கிறது.

தானப்:—"நான் உனக்குத் தெரியும்படி கூறுகிறேன் கேள். துப்பறிவதில் பிரக்கியாதி பெற்ற செல்வநாதனே அந்தச் சிலந்திப்பூச்சி. நாமும், நமது சிநேகரும்,நம்போல் தொழில் செய்யும் கூட்டாளிகளுமே அவன் வலையிற் சிக்கிக்கொள்ளும் ஈக்கள்" என்று கூறியபின், தான் செல்வநாதன் வீட்டிற்குச் சென்றிருந்ததையும், அங்கிருந்த அறைகளில் தான் கண்ட அதிசயமான விஷயங்களையும் யாவும் விவரமாய்க் கூறினான்.

தானப்பன் கூறியவற்றைக் கேட்ட பக்கிரி பொன்னன் மிக்க வியப்பும், திகிலும் பிரமையு மடைந்தான். அவன்

சந்தேகங்களை நிவர்த்தி செய்துக்கொள்ள வேண்டி கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தானப்பன் திருப்திகரமான பதில் கூறியபின் அவனை நோக்கி,

"இந்த விவரங்களைப்பற்றி யெல்லாம் பின்னால் பேசிக் கொள்ளலாம். இப்போது நாம் ஆபத்திலிருந்து எப்படி தப்பித்துக் கொள்வதென்பதைப் பற்றியே முன்னே சிந்திக்கவேண்டும்" என்றான். பொன்னன் அதற்கு என்ன செய்யலாம்? நாம் நெருங்கிய கூட்டாளிகள்-இருவரும் பிராணுபத்தில் சிக்கிக்கொண் டிருக்கிறோம். நீ தாராளமாய் உன் மனதிலுள்ள யோசனையைக் கூறு" என்றான்.

**தானப்:**—செல்வநாதனைப் பற்றி எனக்குள் உறுதியாய்த் தீர்மானம் செய்துகொண் டிருக்கிறேன். அவன் இருக்கிற வரையில் நாமாவது நம்மவராவது நமது தொழில்களில் ஒன்றைக்கூடச் செய்ய நினைப்பது பிராணுபத்தாகவே முடியும். மேலும் நாம் ஒன்றும் செய்யாமலே யிருப்பினும் அவன் தனக்கு அனுகூலமான சமயம் வந்ததே நம்மைத் தனித்தனியாகவோ கூட்டமாகவோ, வேடன் தான் கட்டிவைத்த வலையில் சிக்கிக்கொண்ட ஜெந்துக்களை எப்படிப் பிடித்துக் கொள்கிறானோ அப்படியே பிடித்துக்கொள்வான். ஆகையால் அவன் உயிரோடிருக்கும் வரையில் நம்முயிர் நம்மதென்று நாம் கருதலாகாது.

**பக்கிரி:**—ஆம்; நீ கூறுவது உண்மையே. நண்பனே! இது வரையில் நாம் இருவரும் எத்தனையோ ஆட்களை நமது அகழியில் சொருகிவிட் டிருக்கிறோம். இப்போது இவனுக்காக ஏன் தடுமாற்ற மடையவேண்டும்?

**தானப்:**—சந்தேகமின்றி செய்தே தீரவேண்டும். அதுமட்டுமல்ல; அவன் எழுதி வைத்திருக்கும் அப்புத்தகங்களை

யும் எவ்விதத்திலேனும் நாம் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். அவைகள் இன்னும் வேறு எந்தத் துப் பறிபவனிடம் சிக்கினலும் நமக்கும் நமது நண் பர்களுக்கும் இன்னும் நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் பெரிய ஆபத்தையே விளைவிக்கும். நாம் இரகசிய மாய்க் கூடும் இடங்களைப் பற்றிய மர்மங்களெல்லாம் அவற்றிலிருக்கின்றன. களவாடப்பட்ட பொருள்களை விலைக்கு வாங்கும் ஆசாமிகளைப் பற்றிய சமாசாரங்க ளனைத்தும் அவற்றில் அடங்கி யிருக்கின்றன.

பக்கிரி:—உனக்குள் ஏதேனும் யோசனை யிருக்கிறதோ?

தானப்:—"அவனை என்ன தந்திரமாவது செய்து மயக்கி இங்கு கொண்டுவரவேண்டும். நீயும் நமக்குப் பூரண மான நம்பகமுடைய இன்னும் இரண்டு மூன்று பேரும் அவன் வேலையைப் பார்த்துக்கொள்ள வேண் டும். அதற்குள் நான் சென்று எப்படியேனும் தந் திரமாய் அவன் வசிக்கும் வீட்டிற்குள் நுழைந்து அந்தப் புத்தகங்களை யெல்லாம் கொண்டுவந்து விடு கிறேன். இதுவே என் ஏற்பாடு" என்றான்.

பக்கிரி:—நீ கூறியதெல்லாம் சரிதான். ஆனல் அதை எப் படி நிறைவேற்றுவது? அதாவது அவனை எப்படி ஏமாற்றி யிங்குவரும்படிச் செய்கிறது? அதுதானே பெரிய கஷ்டம்.

தானப்:—அவன் என்னதான் மகா தந்திரசாலியும் சாமர்த் திய முடையவனுமாயினும், நாம் ஒவ்வொரு சமயத் தில் நமது தந்திர சாமர்த்தியத்தால் அவனை வெல்ல முடியாதா பார்ப்போம். இப்போது ஒரு ஸ்திரீ யிருக் கிறாள். அவள் கணவன் நமது கூட்டத்தில் சேர்ந் திருப்பவன். அவன் கொஞ்சகாலமாய் அவளை அலட்

சியம் செய்து மிக்க குரூரமாகவும் அக்கிரமமாகவும் நடத்துகிறான். அதனால் அம்மாது தன் கணவன் மேல் வெறுப்படைந்து பிறகு அவன் தனக்குச் செய்யும் துரோகங்களுக்காக அவன்மேல் சரியான வஞ்சம் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று பிடிவாதங்கொண்டிருக்கிறாள். அவள் செல்வநாதனிடம் சென்று தன் குறைகளை யெல்லாம் கூறி யழுது, "என் கணவனும் அவன் கூட்டாளிகளும் இருட்டுக் கூண்டில் கூட்டம் கூடிப் பெரிய சதியாலோசனைகள் செய்துகொண்டிருக்கிறார்கள். நீ என் கூட வந்தால் அங்குள்ள நடக்கைகளையும், இரகசிய விடங்களையும், இன்னும் நீ யிது காறும் கேட்டிராத அதிசயங்களையும் நீ நேரிற் காணும்படி செய்கிறேன்" என்கிறாள். இக் கட்டுக்கதை சுபாவமான தாகவும் உண்மையாகவுமே தோன்றுகிறதன்றி வேறென்ன? ஆனால் அதற்குத் தக்க ஆசாமி மட்டும் நமக்குச் சிக்கவேண்டும். அவள் மிக்க தந்திரசாலியாகவும், சாமர்த்தியக்காரியாகவும், பணத்திற் காசைப் பட்டு நம்மைத் துரோகம் செய்யாதவளாகவும், தைரியசாலியாகவும், அபிநயம் செய்வதில் மிக்க சாதுர்யமானவளாகவும் இருக்கவேண்டும்" என்றான்.

பக்கிரி:—"என் நமக்குத் தெரிந்த எல்லா மாதரிலும் மிக்க சாமர்த்தியசாலியும், நமக்கு நம்பகமுடையவளுமான நீலாளிருக்கிறாளே. அவளைவிட இதற்குத் தகுதியான ஆள் வேறொருவரு மில்லையென்பதே என் அபிப்பிராயம். இத்தகைய வேலைகளைச் செய்யும்போது சுத்த நிரபராதியைப்போலவும் பூரண உண்மையாளிபோலவும் கடைசி வரையில் அபிநயம் செய்வதில் அவளைவிடக் கைதேர்ந்தவர்கள் வேறு யாரிருக்கிறார்கள்?" என்றான்.

தானப்:—"நீ மொழியும் யாவும் சத்தியமே. ஆனால் அவள் நாம் பூரணமாய் நம்பத்தக்கவளே யென்று கருது கிறாயா? என்னைவிட உனக்கு அவளிடம் நெருக்கமான அதிகப் பழக்கமுண்டு. ஆகையால் அவளைப்பற்றி என்னைவிட உனக்கு அதிகமாய்த் தெரியுமென்பதனா லேயே இதைப்பற்றி உன் அபிப்பிராயத்தைக் கேட் கிறேன்" என்றான்.

பக்கிரி:—"ஏன்? 'உன் கண்களுக்கு மறைவா யிருக்கையில் எந்த மாதையும் நம்பாதே' யென்ற பழமொழியை மறந்துவிட்டாயோ? ஆகையால், நான் கூறுவது என்ன வெனில் நீலாளைப் பக்குவப்படுத்தி செல்வநாதனை மயக் கும் வேலையி லமர்த்திவிட்டு, அவள் நடக்கைகளைக் கவனிக்கும்படி வேறொரு நம்பகமான ஆளை அவள் மேல் மோசூல் வைக்கவேண்டும்" என்றான்.

தானப்:—"பேஷ் நீ கூறும் யோசனை மிக்க மேலானது சரிதான். நீலாளை அவ்வேலைக்குச் சம்மதிக்கும்படி எப்படியாவது செய்துவிடுகிறோம். ஆனால் அவள் மேல் மோசூல் வைக்கத் தக்க அவ்வளவு நம்பகமான ஆள் யாரிருக்கிறான்?" என்றான்.

பக்கிரி:—இங்கு வருகிற எல்லா மனிதர்களைவிடவும் ஜாலக் காரன் இருக்கிறானே! அவனே இந்த வேலைக்குத் தகுதியுடையவன். அவன் நீலாள்மேல் கொஞ்சகால மாய்க் காதல்கொண் டிருக்கிறான். ஆனால் அவன் செல்வத்தை யடையும் வழியி லில்லாததாலேயே நீலாள் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது நாம் மட்டும் அவனுக்குச் சற்று நாணயமான உடை களை யளித்துக் கொஞ்சம் தாராளமாய்ச் செலவுசெய் யத் தக்க பணமும் கொடுத்துவிட்டால் எல்லாம் சரிப் பட்டுப் போய்விடும்.

தானப்:—அப்படியாயின் இது விஷயத்தில் இருநூறு ரூபா யாயினும் செலவழிக்க நான் பின்னிடையமாட்டேன். நீ ஜாலக்காரனிடம் இதைப்பற்றி ஏற்பாடு செய்து விடலாம்.

பக்கிரி:—“சரி; இது விஷயம் பூரணமாய் முடிந்த மாதிரியே” என்றான்.

தானப்பன் உடனே தன் மடியிலிருந்து இருநூறு ரூபாய் நோட்டுகளாகவும் பணமாகவும் எடுத்துப் பக்கிரி பொன்னனிட மளித்துவிட்டு, “நான் இப்போது நோராய் நீலாளைக் காணச்செல்கிறேன். அவள் வசிக்குமிடம் எனக்குத் தெரியும். பெரும்பாலும் அவளைக் கையோடு அழைத்து வருவேன்” என்று கூறி விடைபெற்றுக்கொண்டு இருட்டுக் கூண்டைவிட்டு வெளியிற் சென்றான்.

* * * *

இருட்டுக் கூண்டை விட்டுப் புறப்பட்ட தானப்பன் ஒரு டிராம் வண்டியிலேறிச் சுமார் இரண்டுமைல் தூரம் சென்று இறங்கி, பல வீதிகளைக் கடந்துக் கடைசியில் பரம துஷ்டர்கள் வசிக்கும் ஒரு பயங்கரமான வீதிக்குள் பிரவேசித்தான். பிறகு அதைக்கடந்து சற்று விசாலமும் யோக்கியமுடையதாய்த் தோன்றுவதுமான வேறொரு வீதியிற் பிரவேசித்தான். அதையும் இன்னும் இரண்டொரு வீதிகளையும் கடந்தபின் சற்று விசாலமானதாகவும் நாணயமானதாகவும் தோன்றும் ஒரு வீதியில் பிரவேசித்து, சாளரங்களில் நீலத்திரைச்சீலைகள் விடப்பட்ட ஒருவீட்டின் கதவைத் தட்டினான். உடனே சுமார் 50-வயதுடைய ஒரு மூதாட்டி வந்து கதவைத்திறந்து, தான் கரத்தில் கொண்டுவந்த தீபவொளியால் தானப்பன் முகத்தைப் பார்த்து “ஆ! தானப்பா! நீயா? உன்னைக்காண மிக்க சந்தோஷமடை

கிறேன்" என்ருள். பிறகு இருவரும் சம்பாஷித்துக் கொண்டே உள்ளே சென்ருர்கள். தானப்பன் அம்மாதின் யோக்கியதையையும் தங்கள் நெறியினின்று தவறி அயோக்கிய நடக்கைகளில் பூரணமாய்ப் பிரவேசித்து தற்சமயம் உலகில் பொருள் சம்பாதித்துக்கொண் டிருக்கும் பரிதாபமான கன்னிகைகளுக்கு இவள் தக்க உபாத்தினியாகவும், தோழியாகவும், மந்திரிபோலும் இருந்து ஜீவனம் செய்பவளென்றும் நன்கறிவான். அம்மூதாட்டியின் பெயர் இராதாபாய்.

இராதாபாய் தானப்பனை அழைத்துப்போய் நீலாள் இருக்கும் அறைக்குள் கொண்டுபோய் விட்டாள். நீலாள் நல்ல யௌவன பருவமுடையவள். செழித்து வளர்ந்த மேகத்தைப் பழிக்கும் கூந்தலையும், அனங்கன் வில்லையும் பின்னடையச்செய்யும் புருவங்களையும், மெருகிட்ட ஆடி போல் பிரகாசிக்கும் இடையிலுள்ள நெற்றியையும், காதளவு நீண்டு, செவ்வரி படர்ந்து, மலர்ந்து, கண்ட வாலிபர் உள்ளங்களை யுடனே கொள்ளைகொள்ளும் சுபாவமுடைய நயனங்களையும், குமிழ்போன்ற நாசியையும், கோவையைப் பழிக்கும் அதரங்களையும், பூரணச் சந்திரன்போன்ற முகாரவிந்தத்தையு முடையவள். இவற்றிற் கிணையான குற்றமற்ற மற்ற அங்கங்களையு முடைய அம்மாது அந்த அறையில் உள்ள நெகிடித் தீயின் எதிரில் ஒரு பெரிய நாற்காலியில் உட்கார்ந்து சாய்ந்துகொண்டு ஏதோ சிந்தனையிலுள்ளவள் போல் காணப்பட்டாள். அவள் உடைகள் நாணயமான விலையுள்ள உடைகளே.

தானப்பன் அவளோடு பேசத்தொடங்கி க்ஷேமலாபங்களை விசாரித்தபின் "நீலா! நான் உன்னிடம் தனியாய் ஒரு இரகசியவிஷயத்தைப்பற்றிப் பேசவந்தேன். தயவு செய்து சற்றுநேரம் வெளியில் வருவாயாயின் தெருவில்

உலாவிக்கொண்டே சம்பாஷிக்கலாம்'' என்றான். நீலாள் ஆனால் இச்சமயம் வெளியில்செல்லத் தேகம் சுகமான நிலைமையிலில்லை. என்ன பேசவேண்டுமாயினும் இங்கேயே பேசலாம்'' என்றாள்.

**தானப்:**—நான் ஒரு விவகார விஷயமாய் உன்னிடம் பேச வந்தேன். பக்கிரி பொன்னனுடைய இருட்டுக் கூண்டிற்கு அன்று ஒரு நாணயமான கன்னிகையை மயக்கிக்கொண்டு வந்தாயே, நினைப்பிருக்கிறதா?

**நீலாள்:**—ஆகா! கடைசியில் யாவும் பயனின்றிப் போய் விட்டதே அது. அப்பெண்ணைப் பற்றி இப்போதென்ன?

**தானப்:**—அப்பெண்ணைப்பற்றி யொன்று மில்லை. அப்போது சாணைபிடிப்பவன் ஒருவன் வந்து நம்மோடு ஒருவனாய்க் கலந்துகொண்டு அப்பெண்ணை யொழித்து விடுகிறதாய் ஒப்புக்கொண்டானே கவன மிருக்கிறதா?

**நீலாள்:**—''ஆ! அங்குள்ள அகழியில் அமிழ்த்தி முடித்து விட்டோமே அதுகூட மறந்துபோமோ?'' என்றாள்.

**தானப்:**—''அது சரிதான். ஆயினும் இப்போது நான் கூறும் சங்கதிகளைக் கேட்டால் வியப்படைவாய். அந்தச் சாணைக்காரனை நாம் முடித்துவிட்டோமென்று நீ நம்பி யிருக்கிறாய். ஆனால் அவனை நாம் அகழியில் போட்டதே அங்கிருந்த குளிர்ந்த ஜலத்தால் அவன் மூர்ச்சை தெளிந்து உயிர் தப்பி இப்போது சுகத்தோடிருக்கிறான். இதுமட்டுமல்ல; இன்னொரு சங்கதி என்ன வெனில், அச்சாணை பிடிப்பவன்போல் மாறுவேடமணிந்து வந்தவன் யாரென்று நினைக்கிறாய்? வேறு

யாருமல்ல. பிரக்கியாதிபெற்ற துப்பறியும் உத்தியோகஸ்தனுகிய செல்வநாதனே'' என்ருன்.

இச்சங்கதிகளைக் கேட்டதே நீலாள் மிக்கவியப்பும் பிரமையும் பயமுமடைந்துவிட்டாள். தானப்பன் உடனே தான் செல்வநாதன் வீட்டிற்குச்சென்றிருந்த சமயம் அங்கு தான் கண்ட அதிசயங்களையும், செல்வநாதன் எழுதி வைத்துக் கொண்டிருந்த புத்தகங்களிலிருந்த குறிப்புகளையும்பற்றி விபரமாய்க் கூறினுன். யாவும்கேட்ட நீலாள் மிக்கதிகிலடைந்துவிட்டாள். ஏனெனில் இதுகாறும் தன் நடவடிக்கைகள் ஒருவருக்கும் தெரியாதென்றே நம்பிக்கொண்டிருந்தாள். தன் நடக்கைகளில் தனக்குத் தீங்கை யுண்டாக்கத் தக்கவைகள் பல விருக்கின்றன. இப்போது அவை ருசுவுக்கு வந்து தான் தண்டிக்கப்படாவிட்டாலும், அச்சங்கதிகள் செல்வநாதனுக்குத் தெரிந்திருக்கிற வரையில் தன் க்ஷேமத்திற்கு அவை இடையூருகவே யிருக்குமென்று அவள் மனதிற் பட்டது.

ஆகையால் தானப்பன் தான் செய்யவந்த ஏற்பாடு செல்வநாதனை யடியோடு ஒழித்துவிட வேண்டுமென்பதே என்று கூறியதைக்கேட்ட நீலாள் உடனே அதற்குத் தான் உதவிசெய்வதாய் ஒப்புக்கொண்டாள். அதன்மேல் இருவரும் அவ்விஷயத்தை யெப்படிச் செய்வதென்று ஆலோசிக்கத் தொடங்கினுர்கள்.

அப்போது, நீலாள் கூறிய மிக்க சாமர்த்தியமும் தந்திரமுமாகிய ஏற்பாடுகளையும் ஆலோசனைகளையும் கேட்ட தானப்பன் மிக்க சந்தோஷமும் அவள் விஷயத்தில் பூரண நம்பிக்கையும் உடையவனுன். இருவரும் அவ்விஷயத்தைப் பற்றிப் பூரணமாய்ப் பேசி முடிவான தீர்மானங்களைச் செய்துகொண்டார்கள். அதன்மேல் தானப்பன் தான் வந்த விஷயத்தில் பூரண ஜெயமடைந்த சங்கதியைத் தன் நண்ப

ளுகிய பக்கிரி பொன்னனிடம் கூறுவதற்காக, நீலாளிடம் விடைபெற்றுக்கொண்டு ஜாடித்தீவை நோக்கிப் புறப்பட்டான்.

நீலாள் இருக்குமிடத்தில் இருக்கும் இராதாபாயோடு கூடவிருக்கும் பாபம்மாள் என்பவள் நீலாள்மேல் வெறுப்புடையவள். நீலாளும் தானப்பனும் இரகசியமாய் பேசிக்கொண்டிருந்த சங்கதிகள் முழுமையும் பாபம்மாள் ஒரு வார்த்தையேனும் விடாமல் கதவின் பின்னுல் மறைந்து கொண்டிருந்து முழுமையும் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனல், நீலாளாவது தானப்பனுவது கொஞ்சம்கூட அதை அறிந்து கொள்ளவில்லை.

---

## 67-வது அத்தியாயம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த இரண்டு வாரங்கள் கழித்து ஒருநாள் இரவு ஒன்பதுமணி இருக்கும். அச்சமயம் இளவரசன் மாளிகையில் விருந்து நடக்கிறது. அந்த விருந்திற்கு முக்கியமான மனமொத்த சிலநண்பர்கள் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் யாரெனில் மதனவல்லிச் சீமாட்டி, அவள் கணவனுகிய செல்லப்பபிரபு, குமாரவேல் பிரபு, சர்தார் சூரியநாயகம் ஆகிய இவர்களே.

குமாரவேல் பிரபுவுக்கு, மதனவல்லி தன்காதலை ஏற்றுக் கொள்ளாததாலும், செல்லப்பனை மணம்புரிந்து கொண்டபடியாலும், அவள்மேல் மிக்க வெறுப்பும் குரோதமுமே. ஆனல் இப்போது அவளும் அவள் கணவனும் இளவரசனுடைய சிநேகத்தையும் தயவையும் பெற்றிருப்பதால் தான் அவர்கள்மேலிருக்கும் வெறுப்பைக் காட்டத்தொடங்கினுல் இளவரசன் வைக்கும் விருந்துக்குத் தனக்கு வரும் அழைப்புச்சீட்டு அடியோடு நின்றுவிடும். ஆகையால் காலத்

தை அனுசரித்துத் தன் மனதிலிருந்த விரோதம் யாவும் மனதில் அடக்கிக்கொண்டு சினேகிதனைப்போலவே நடிக்கத் தொடங்கினான். குமாரவேல் பிரபு மிக்க சூதும் கபடமும் துரோககுணமு முடையவன். இவன்மேல் மதனவல்லிக்குக் கோபமே யிருந்தது. ஆனால் அவனுடைய தந்திரம் பொருந்திய அபிநயங்களால் அவளுக்கும் அவள் கணவனுக்கு மிருந்த கோபம் தணியச்செய்து கொஞ்சம் பழகியதே அவர்களை அடிக்கடி காண்பதும் மிக்க அன்புடைய சினேகன்போல் அபிநயம் செய்வதும், செல்லப்பப் பிரபுவுக்கு குதிரை முதலியவைகளும், மதனவல்லிக்கு புஷ்பச் செண்டுகள் பழங்கள் முதலியவைகளும் பரிசளிப்பதும் ஆகிய செய்கைகளால் அவர்களுக்கு நெருங்கிய நண்பன் போல் ஆகத் தொடங்கினான்.

நேயர்களே! நமது நாட்டில் ஒரு ஆடவனுக்கு ஒரு ஆடவன் எவ்வளவு பொருள்களைப் பரிசாக வளித்தாலும் அதனால் எவ்வித சந்தேகமும் தோன்றாது. ஆனால் ஒரு ஆடவன் தனக்கு நெருங்கிய சுற்றமல்லாத ஒரு கன்னிகைக்காவது, ஒருவனுடைய மனைவிக்காவது ஒன்றைப் பரிசாக அளித்தாலோ, அந்த ஸ்திரீ சுத்த மூட புத்தியுடையவளாகவாவது, அச்சம் மடம் நாணம் என்ற கற்பின் வேலிகளை இழந்து விட்டவளாகவாவது இருந்தாலன்றி ஒருபோதும் அன்னிய ஆடவனளிக்கும் அப் பரிசை ஏற்றுக்கொள்ளவே மாட்டாள். இதுமட்டு மல்ல; அப்படிச் செய்வது அவன்மேல் பெரிய குற்றமாகும். அவன் அம் மாதின்மேல் கெட்ட எண்ணங்கொண் டிருப்பவனாகக் கருதப்படுவான். அம்மாதும் அவன்மேல் மிக்க கோபமுடையவளாவாள். மேல்நாட்டு ஆசாரமோ அப்படியல்ல. ஒரு பெரிய மனிதன் சாதாரணமாய் அப்படிச் செய்வது மரியாதையான நடக்கையாகவே கருதப்படும்.

ஸர்தார் சூரியநாயகமும் மதனவல்லியின் நட்பிற்காக அவளிடமும் அவள் கணவனிடமும் மிக்க சிநேகப் பான்மையாகவே நடந்துகொண் டிருந்தான். மதனவல்லி யும் அவன் நட்பை விரும்புகிறவள்போல் அவர் வருவதாய்க் கூறும் சமயங்களிலெல்லாம் அவனைச் சந்திக்க வீட்டில் ஆயத்தமாய் இருப்பாள். ஸர்தார் தான் எப்படியாயினும் அவளுடைய நட்பைப் பெறலாம் என்று நம்பிக்கையோ டிருந்தான்.

விஷயங்கள் இத்தகைய நிலைமையிலிருக்கும்போது, நாம் கூறியபடி அன்று இரவு ஒன்பது மணிக்கு விருந்து நடந்தது. சாதாரண போஜனம் முடிந்தபின் யாவரும் குடிவகைகளை யருந்த ஆரம்பித்தார்கள். அந்த உற்சாகத் தால் யாவரும் சந்தோஷத்தோடு சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் ஒரு வேலைக்காரன் வந்து இளவரசனிடம் இரகசியமாய் ஏதோ கூறினான்.

இளவரசன் "ஹா! பிரபுவை யுடனே உள்ளே யனுப்பு!" என்றான். வேலைக்காரன் சென்றதே இளவா சன் தன் நண்பர்களை நோக்கி,"சில நாட்களுக்கு முன் அவ சர விஷயமாய்த் திடீலென்று பரிதிபுரத்திற்குச் சென்ற சுகசிங்கம் பிரபு திரும்பி வந்துவிட்டார்" என்றான்.

**குமாரவேல் பிரபு:**—"ஆ! ஆம். ஆம். அவர் என்னத்திற் காக பரிதிபுரத்திற்குச் சென்றார்?" என்றான்.

**இளவரசன்:**—"ஆ! அது அவருடைய இரகசியம்" என் றான்.

உண்மையில் அப்பிரபு சென்ற விஷயம் இளவரசனுக் குச் சம்பந்தப்பட்டதே. அவனுக்குப் பூரணமாய் யாவும் தெரியும்.

சுகசிங்கம் பிரபு அறைக்குள் வந்ததும் இளவரசன் இடது பக்கம் உட்கார்ந்தார். அவனுடைய வலது பக்கத்தில் மதனவல்லி யிருக்கிறாள். இளவரசனும் பிரபுவும் சற்றுநேரம் சாதாரண க்ஷேம விஷயங்களைப்பற்றி சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள்.

அச்சமயம், குமாரவேல் பிரபுவும், சர்தார் சூரியநாயகமும், செல்லப்பப் பிரபுவும் ஒரு வார்த்தையைப்பற்றி மிக்க தீட்சணியமாய்ப் பேசத் தொடங்கினார்கள். அச்சந்தடியில் இளவரசனும் சுகசிங்கம் பிரபும் இரகசியமாய்ப் பேசத் தொடங்கினார்கள்.

இளவரசன் தாழ்ந்த குரலாய் "என்ன சமாச்சாரம்?" என்றான்.

பிரபு:—நேற்று நான் அனுப்பிய கடிதம் உம்மிடம் சேரவில்லையோ?

இளவர:—ஆம்; சேர்ந்தன. அந்தத் தேதிகட்குப் பின் விவகாரங்களில் மாறுதல் ஒன்றும் நேரவில்லையே?

பிரபு:—ஒன்று மில்லை. ஜானகி முன்னமே இளவரசியிடம் போய்ச்சேரப் புறப்பட்டுவிட்டாள்.

இளவர:—ஆம் தெரியும். இதுகாறும் அவள் போய் தன் மற்ற சகோதரிகளிடம் சேர்ந்துவிட் டிருக்கவேண்டும். அவளுக்கும் அந்தப் பொய்ப்பெயர் வைத்துக்கொண் டிருக்கும் ஜகதீசனுக்கும் நேர்ந்த விவகாரம் அபஜெய மடைந்ததே அவள் பரிதிபுரத்தை விட்டுச் சென்றாள்.

மதனவல்லி தன் கணவன் முதலியவர்கள் வாதம் செய்துகொண் டிருப்பதை மிக்க அக்கரையோடு கவனிப்பதுபோல் தோன்றினும், உண்மையில் அவள் இளவாச

னும் சுகசிங்கம் பிரபுவும் இரகசியமாய்ப் பேசுவதை மிக்க உன்னிப்பாய்க் கேட்டுக்கொண் டிருந்தாள். அவள் ஜகதீசனென்ற பெயரைக் கேட்டதே மிக்க வியப்பும் திகிலு மடைந்தாள். அவள் அவயவங்கள் துடித்தன. ஆயினும் ஒருவரும் அதைக் கவனிக்கவில்லை. மதனவல்லி அது முதல் பின்னும் அக்கரையாய் அவர்கள் சம்பாஷணையை யறிய விரும்பினுள். மேலுக்குத் தன் கணவன் முதலிய வர்கள் சம்பாஷணையிலேலே முழுநாட்டமு முடையவள் போல் மிக்க சாதுரியத்தோடு அபிநயம் செய்துகொண் டிருந்தாள்.

பிறகு இளவரசனும் பிரபுவும் பேசியதைக் கேட்டதில் ஜகதீசன் அவன் பொய்ப்பெயர் வைத்துக்கொண் டிருக் கிருன் என்று இளவரசன் கூறியதன் காரணமும் உண்மை யில் அவன் யாரென்றும் அறியலானுள். அதனுல் அவள் மிக்க சந்தோஷமும், தைரியமும், உற்சாகமு மடைந்தாள்.

மதனவல்லி ஜகதீசன் பெயரைக் கேட்டதே மனத் துடிப்படைய வேண்டியதும், அவன் விஷயத்தைக் கவ னிக்க வேண்டியதும் ஏன், காரணமென்ன? இது பெரிய அதிசயமே. ஆயினும் நாம் இப்போது அதைப்பற்றிக் கூற ஆயத்தமா யில்லை. போகப்போகக் கதையின் போக்கே அதை விளக்கும்.

இளவர:—ஜகதீசன் இன்னும் சிறையில்தானே வைக்கப் பட்டிருக்கிறுன்?

சுக:—ஆம். பின்னென்ன? ஜானகி என்ன செய்வாள்? அவள் அவனை மயக்க என்ன சமார்த்திய தந்திரங்க ளெல்லாம் செய்து பார்த்தும் அவன் சத்திய நெறியி னின்றும் எள்ளளவேனும் பிசகுகிறவனு யில்லை. அவனை விட்டுவிட்டால் நமது சதியாலோசனையை

யவன் எங்கும் தூற்றிவிடுவான். அதுமட்டு மல்ல; நமது நோக்கம் அடியோடு நிறைவேருமற் செய்து விடுவான். நமது நோக்கம் நிறைவேற மட்டும் அவன் அங்கிருந்தால்தான் நமது தந்திரமான சூழ்ச்சிகள் நிறைவேறும். அந்தச் சனியன் போன்ற இளவரசி தங்களை விட்டொழிவாள்.

இளவர:—ஆனல் பாஞ்சால துரைத்தனத்தார் நமது பிரிய மிருக்கு மட்டும் அவனைச் சிறையில் வைத்திருப்பார் களா? ஏனெனில் தக்க காரணமில்லாததால் அவனை விடுதலை செய்துவிடுவதே தகுதியென்று விட்டுவிட் டால் என்னசெய்வது?

பிரபு:—ஒருபோதும் அப்படி செய்யமாட்டார்கள். பாஞ் சால அரசன் தாங்கள் செய்த உதவிகளுக்காக நன்றி யுள்ளவனுக விருக்கிருர். தன்னுல் கூடிய எல்லா உதவியும் செய்வதாய் எனக்கு வாக்குத்தத்த மளித் திருக்கிருர். ஆகையால் அது விஷயத்தில் சந்தேகமே யில்லை.

இளவர:—அப்படியானல் அந்த மூடனுகிய ஜகதீசன் நீண்டகாலம் வரையில் அங்கு சிறையில் வைக்கப்பட் டிருப்பான் என்று நம்பலாம். ஆ! நீ அவ்வளவு புகழ்ந்து எழுதினுயே, அந்தக் கோமளவல்லி என்ற கன்னிகையின் சங்கதி யென்னமாயிற்று. அவள் வனப்பை மிகப் புகழ்ந்து எழுதி யிருந்தாயே.

பிரபு:—நான் கூறுவதை நம்புவீரா? அவளைப் பக்குவமாய் என் மாளிகைக்கே கொண்டுவந்திருக்கிறேன்.

இளவர:—ஆகா! அப்படியானல் முன்னமே யவளைச் சரிப் படுத்தி வசியம் செய்துகொண்டீரோ?

பிரபு:—"இல்லை யில்லை. இன்னு மில்லை. இதுகாறும் நான் அவளிடம் தந்தையைப்போல் அன்பு காட்டி நடந்து கொள்ள வேண்டியதாயிற்று; இன்றேல் அவளுக்கு ஜகதீசன் மேல் வெறுப்புண்டாகச் செய்திருக்கமுடியாது. ஆயினும் இனி எல்லாம் சரிப்படுத்தி விடுவேன். அவளுடைய சகோதரி யொருத்தி யிங்கிருக்கிறாளாம். எப்படியேனும் அவளைப் பார்க்கவேண்டுமென்று ஆவலுடையவளா யிருக்கிறாள். ஆனால் அச்சகோதரியின் சரியான மேல் விலாசம் அவளுக்குப் புலப்படவில்லை. எப்படியேனும் அவளுக்கு என்மேல் நன்றியும் அபிமானமும் உண்டாகச் செய்துவிட்டிருக்கிறேன். இன்னொரு சமயம் இந்தச் சங்கதிகளை யெல்லாம் விவரமாய்க் கூறுகிறேன்" என்று கூறினார்.

மதனவல்லி இவர்கள் சம்பாஷணையில் ஒரு வார்த்தை கூட விடாமல் கேட்டுக்கொண்டிருந்தாள். அச்சமயம் திடீலென்று நேர்ந்த ஒரு சம்பவத்தால் இளவரசனும் பிரபுவும் பேசிக்கொண்டிருந்த வாக்குவாதமும் தட்டென்று நின்றுவிட்டது. அதென்னவெனில், மதனவல்லி திடீலென்று எக்காரணத்தாலோ எதிரிலிருந்த குழம்புக் கிண்ணத்தைத் தள்ளிவிட அதிலிருந்த குழம்பு அவள் அணிந்திருந்த விலையுயர்ந்த உடையில் மேல் ஊற்றிக்கொண்டது. மதனவல்லி யுடனே தன்னை மன்னிக்கும்படி கூறிவிட்டு அங்கிருந்து புறப்பட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

மதனவல்லி தன் அறைக்குச் சென்றதும் கதவை மூடிக்கொண்டு நாற்காலியில் உட்கார்ந்து பூமியை உற்றுப் பார்த்துக்கொண்டே நெடுநேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். அவள் மனதில் அடக்கமுடியாத துயரமுண்டாய்விட்டது. கடைசியில் தன் குழப்பங்களையும் துயரத்தையும்

அடக்கிக்கொண்டு தனக்குள் ஒரு தீர்மானத்தைக்கொண்டு தன் அந்தரங்கத் தோழியை யழைத்து,

"நீ யுடனே பத்மாவதி யம்மாள் (செல்லப்பன் தாய்) வீட்டிற்குச் சென்று, 'பெரும்பாலும் ஒரு ஆளைப்பற்றி உன்னை விசாரிக்க யாராவது வருவார்களாம்—அதைப்பற்றி யுன்னைச் சாக்கிரதையா யிருக்கும்படி யெச்சரிக்கை செய்யச் சொன்னார்கள்'' என்று நான் கூறியதாய்க் கூறிவிட்டு வா. ஒரு சமயம் அந்தம்மாள் அப்போது வீட்டில் இல்லாவிட்டால் அந்தம்மாளிடம் வேலைக்காரியா யிருக்கும் ஜெயதேவி யம்மாளிடம் இவ்வாறே கூறு. அவர்கள் விஷயம் இன்னதென்று தெரிந்து கொள்வார்கள்'' என்று கூறினாள்.

வேலைக்காரி சென்றபின் மதனவல்லி தன் போஜன அறைக்குச் சென்று உட்கார்ந்து சற்றுநேரங் கழித்து வேலைக்காரனை யழைத்து, "இளவரசரிடம் சென்று அவரும் அவர் நண்பர்களும் என் அறையில் வந்து காபி யருந்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டதாகக் கூறு'' என்றாள்.

அவ்வாறே அரைமணி நேரங் கழித்து இளவாசனும் அவன் நண்பர்களும் மதனவல்லியின் அறைக்கு வந்து சேர்ந்தார்கள். மதனவல்லி யவர்களுக்கு வேண்டிய யாவும் ஆயத்தமாய்ப் படைத்து அவர்களெல்லாம் குடிவகைகளை யருந்திக்கொண் டிருக்கையில் அவள் அந்த அறையில் ஓர் மூலையிலிருந்த நெகிடித் தீயினருகிற் சென்று ஒரு பெரிய நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ சிந்தனையி லிருந்தாள்.

அச்சமயம் ஸர்தார் சூரியநாயகம் மெதுவாய் எழுந்து போய் அவளருகில் உட்கார்ந்தார். அவருக்குச் சுபாவமாகவே அவள்மேல் காதலிருந்தது. ஆனால் அதைப்பற்றி

மனம் விட்டு அவளிடம் தாராளமாய்ப் பேச அச்சப்பட்டுக் கொண்டிருந்தார். அச்சமயம் தாராளமாய் மதுபானம் செய்துவிட் டிருந்ததால் கூச்சமின்றித் தன் காதலை வெளியிடத் துணிந்தே அவள் அருகில் போய் உட்கார்ந்தார்.

இத்தகைய சம்பாஷணைகளைக் கதையின் தொடர்ச்சிக்கு அவசியமான வரையில் மட்டுமே சுருக்கமாய்க் கூறும் நம் வழக்கப்படி கூறிவிடுகிறோம்.

ஸர்தார் தன் தந்திர சாமர்த்தியத்தை யெல்லாம் காட்டி தன் விருப்பத்தை வெளியிட்டபோது மதனவல்லி அவர்மேல் பூரண விருப்பத்தைக் காட்டுகிறவள்போல் அபிநயித்து, "ஆ! என் உள்ளத்தில் இரகசியமாய் மறைத்து வைக்கப்பட்ட கோரிக்கைப்படித் தங்கள் மனதிலும் இருப்பது சத்தியமாயின்...? என்றாள்.

ஸர்தார்:—"ஓ! என் அன்பான சிநேகியே! எனக்குன் மேலிருக்கும் காதல் சத்தியமே. அதை எவ்விதமாய் நிரூபிக்கச் சொன்னாலும் சித்தமா யிருக்கிறேன். நான் என்ன செய்ய வேண்டுமென்பதை மட்டும் கூறி விடு.

மதனவல்லி அவன்மேல் மிக்க காதலுடையவள் போல் அவன் வதனத்தைநோக்கி "நான் கோரும் ஒரு நுட்பமான உதவியைச் செய்தால் போதும்" என்பதற்குள்,

ஸர்தார்:—"நீ சொல்லவேண்டியதே ஆலசியம்..." என்றதும்,

மதன:—"என் மனோபாவத்தை வாயாற்கூற எனக்கு மிக்க நாணமா யிருக்கிறது. ஆகையாற் சற்று நேரத்திற்குள் என் மனதிலிருப்பதை யொரு சீட்டிலெழுதி இரகசியமா யும்மிடம் அளிக்கிறேன்" என்றாள்.

இதைக் கேட்ட ஸர்தார் மிக்க ஆனந்த மடைந்து அவளிடம் விடைபெற்றுச் சென்று இளவரசன் முதலியவர்களோடு சேர்ந்துகொண்டான்.

சற்றுநேரங் கழித்து குமாரவேல் பிரபு தன் இடத்தை விட்டு எழுந்து மெதுவாய் மதனவல்லி யிருக்கு மிடத்தில் உட்கார்ந்தான். அவனுக்கு உள்ளே மனதில் அவள்மேல் குரோதமே யிருந்தாலும் அவள்மேலிருந்த காதல் மட்டும் நீங்கவில்லை. அதில் மிக்க ஆவலே யிருந்தது. ஆகலால் சாதாரணமாய்க் காதலர்கள் மனப்பால் குடிப்பதுபோல், தான் மதனவல்லிக்கும் அவள் கணவனுக்கும் பரிசுகளளித்து, மிக்க அன்பான நண்பன்போல் அபினயம் செய்வதால் அவள் தன்மேல் காதல்கொண் டிருப்பாளென்றே அவன் எண்ணிக்கொண்டான்.

அதனால் மதனவல்லி ஆழ்ந்த யோசனையி லிருப்பதைக் கண்ட அப்பிரபு அவள் தன் சிந்தனையாகவே யிருக்கிறாளென்று கருதி அவள் கரங்களைப் பற்றிக்கொண்டு மிக்க அன்போடு "உன்னைத் தனியே கண்டு வார்த்தையாடச் சமயம் வாய்ந்தது என் நற்காலமே" என்றான்.

இவன் கருத்தை யுணர்ந்த மதனவல்லியின் மனதில் உடனே இன்னொரு யோசனை யுதித்தது. அவளுக்கு அப்பிரபுவின்மேல் பூரண வெறுப்பே. ஏனெனில் அவனுடைய சூது வாது வஞ்சம் நெஞ்சம் யாவும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் அவன் முதலில் தன் கரத்தைப் பற்றியதே அவளுக்கு மிக்க கோபமே வந்தது. ஆயினும் அவன் மனதில நம்பி யிருக்கும் எண்ணத்தை யுணர்ந்ததே மேல் கூறியபடி யவள் மனதில் ஒரு யோசனை யுதித்தது. அதென்னவெனில் அவளுக்கு அச்சமயம் ஆகவேண்டிய ஒரு அவசியமான காரிய மிருக்கிறது. அது நிறைவேற மட்டும்

அவள் மனம் மிக்க குழப்பத்திலும் துயரத்திலுமே யிருக்கும். அந்தக் காரியத்தைத் தந்திரமாய் முடித்துக்கொள்ள வேண்டும். அதற்கு இவனையும் ஒரு கருவியாக்கிக் கொள்ளலாம் என்பதே.

அதனால் அவள் அவன்மேல் அந்தரங்கத்தில் அன்புடையவள்போல் அபிநயித்து "ஆ! தாங்களா? தாங்கள் என்மேல் இவ்வளவு விசுவாசம் காட்டுவது எனக்கு உண்மையில் உள்ளத்தில் எப்படியோ விருப்பினும், நம்பக்கூடாத வியப்பா யிருக்கிறது. ஏனெனில் முதல் முதல் தாங்கள் என்னைக் கண்டு சம்பாஷித்தது முதல் சில காரணங்களால் என்மேல் மனஸ்தாபம் கொண்டிருக்கிறீர்க ளென்பதை நான் உணர்ந்தே யிருக்கிறேன். என்மேலிருந்த கோபத்தை மன்னித்து விட்டீர்களென்று நான் கருதத் தைரியமில்லை" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட குமாரவேல் பிரபு "இவள் நம்மேல் காதல்கொண்டு ஏக்க மடைந்திருக்கிறாள்" என்று எண்ணிக்கொண்டு மிக்க சந்தோஷ மடைந்து "ஓ! என் அன்புள்ள மதனவல்லியே! எனக்கு உன்மேல் கோபமாவது வெறுப்பாவதுகூட எங்கேனும் உண்டாகுமோ? நான் உன்மேற் கொண்ட காதல் மற்ற எல்லாருடைய காதலைக் காட்டிலும் எவ்வளவோ அளவு மீறியது; அப்படி யிருக்க அக்காதலை நாம் அடையக்கூடாது போய்விட்டதே யென்ற வியாகூலமன்றி வேறில்லை. எனக்கு உன்மேல் எள்ளளவேனும் கோபமாவது வெறுப்பாவது இல்லை யென்பதை ருசுப்படுத்த நீ என்ன சொன்னாலும் அதைச் செய்யச் சித்தமா யிருக்கிறேன்" என்றான்.

மதனவல்லி:—"ஆ! நான் அப்படி மட்டும் எண்ணி யிருந்தால்...." இருக்கட்டும் பரவாயில்லை. இப்போது நான்

தங்களிடம் என்ன உதவிகோரினும், அது எக்காரிய மாயினும் துணிந்து செய்வீர்களா?'' என்றாள்.

பிரபு:—"ஆகா! கட்டாயம் செய்வேன். நீ என் உயிரையே தத்தம் செய்யும்படி கூறினாலும் உடனே செய்யச் சித்தமா யிருக்கிறேன். எந்த வேளையிலேனுஞ் சரி'' என்றான்.

மதன:—"நான் கூறும் சங்கதி எதுவாயினும் அதை நமக்குள் இரகசியமாய் வைத்திருப்பதாகக் கடவுளறியச் சத்தியம் செய்துகொடுப்பீர்களா?'' என்றாள்.

பிரபு:—"தடையின்றி மிக்க சந்தோஷத்தோடு அப்படியே செய்வேன். என் உயிர் போவதாயினும் உனக்குத் துரோகம் செய்யமாட்டேன்'' என்றான்.

மதனவல்லி இம்மொழிகளைக் கேட்டதே தன் எண்ணம் நிறைவேறிய மாதிரியே யென்று மிக்க களிப்படைந்தாள். பிரபு அவள் தன் காதலுக்கு நாம் இசைந்துவிட்டதற்காகச் சந்தோஷ மடைந்தாள் என்று எண்ணிக்கொண்டார். மதனவல்லி தன் முகத்தில் மிக்க பிரகாச முடையவளாய்ப் பிரபுவை நோக்கி, ''பிரபுவே! இப்போது என் மனதிலுண்டா யிருக்கும் சந்தோஷத்தை யித்தகையதென்று கூற என்னால் முடியாது. நான் கூறவேண்டிய விஷயங்களை இச்சமயம் கூலாகாது. சற்று நேரத்திற்குள் என் விருப்பத்தை ஒரு இச்சிறு கடிதத்தில் வரைந்து தங்களிடம் இரகசியமாய்க் கொடுக்கின்றேன்'' என்றாள்.

பிரபு திரும்பிச் சென்றதும் மதனவல்லி எழுந்து இளவரசன் முதலியவர்கள் இருக்கு மிடத்திற்குச் சென்றாள். அச்சமயம் அவர்கள் இராஜ முறைமைகளைப்பற்றி சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். சாதாரணமாய் துரைத்தன சம்

பந்தமான விஷயமாயின் ஸ்திரீகளுக்குப் பிடிப்பதில்லை என்கிற சங்கதி யாவர்களுக்குந் தெரியுமாதலால் அவள் அருகில் வந்ததே அவர்கள் அச்சம்பாஷணையை அடியோடு நிறுத்தி விட்டார்கள்.

இளவரசன் மதனவல்லியைக் கண்டதும் மலர்ந்த வதனத்தோடு "ஏன் எங்களோடு உட்கார்ந்து காபி யருந்திச் சற்றுநேரம் நாங்கள் சங்கீத ஆனந்தத்தை யருந்தும்படி உதவக்கூடாதா?" என்றான்.

மதனவல்லி "மகாராஜா! இதைவிடச் சந்தோஷமான வேலை எனக்கொன்றுமே யில்லை. ஆனால் திடீலென்று என்ன காரணமோ, தேகம் சற்று அசௌக்கியமா யிருக்கிறது. ஆகையால் நான் சற்றுநேரம் என் அறையிற் சென்று நிம்மதியாயிருக்க விரும்புகிறேன். சங்கீதானந்தத்திற்குப் பதில் என் கணவர் அவர் புதிதாய் அறிந்து கொண்டிருக்கும் ஒருவித மிக்க மதுரமான பானம் தயார் செய்து கொடுப்பார்" என்றாள்.

அவள் விடைபெற்றுச் சென்றதும் இளவரசன் முதலியவர்கள் சீட்டு முதலிய விளையாட்டுகளை ஆடத் தொடங்கினார்கள். செல்லப்பப் பிரபு மேற்கண்ட பானத்தைத் தயார் செய்யத் தன்னறைக்குச் சென்றார்.

மதனவல்லி சற்றுநேரங் கழித்துத் தன் கணவன் இருக்கு மிடத்திற்குச் சென்று வாடிய முகத்தோடு அவன் எதிரில் நின்று, தாழ்ந்த குரலாய் "அந்தோ! தங்களை இப் பானம் செய்யும்படி ஏற்பாடு செய்ததே முட்டாள்தனமாய்விட்டது" என்றாள்.

செல்லப்பப் பிரபு மனக்கலக்க மடைந்து, "ஏன் என்னத்திற்காக அப்படிக் கூறுகிறாய்?" என்றான்.

மதன:—"தாங்கள் அங்கிருந்து வந்துவிட்ட பின் நான் மரியாதைக்காகச் சற்றுநேரம் தாமதித்துப் பிறகு விடை பெற்றுக்கொண்டு திரும்புகையில், இளவரசன் நான் தவிருமல் அறிந்துகொள்ளத் தக்க ஒரு சமிக்கை செய்தான். அதாவது, தான் இங்கேயே சயனிப்பதற்காகத் தங்கிவிடப் போவதாய்க் கூறினுன்" என்ருள்.

நேயர்களே! இவர்கள் ஆசாரத்தால் நேரிடும் இத்தகைய தீங்குகளையும் இச்சமயத்தில் கணவன் மனம் என்ன நிலைமையிலிருக்கு மென்பதையும் பற்றி விவரித்துக் கூறுவது அனுவசியம்.

பிறகு மதனவல்லி தன் அறைக்குச் சென்றுப் பின் வரும் இரண்டு கடிதங்களையும் எழுதினுள். முதல் குமாரவேல் பிரபுவிற்குக் கீழ்க்கண்டபடி எழுதினுள்.

"என் அன்பார்ந்தவரே—நான் தங்கள்மேல் எனக்கிருக்கும் அன்பை நிரூபிப்பதற்காகவே என் மனதிலிருப்பதை இவ்வாறு கடிதத்தில் எழுதிக் கொடுக்கிறேன். ஏனெனில் பதிலுக்கு நான் கோரும் உதவியைத் தடுமாற்றமின்றித் தாங்கள் செய்யவேண்டுமென்பது எனது விருப்பம். தாங்கள் நாளை காலை பதினேரு மணிக்கு வந்தால் நான் என் அறையில் இருக்கிறேன். அப்போது நிம்மதியாய் என் மனோபாவ மனைத்தும் கூறுவேன். மற்றவை நேரில்.

மதனவல்லி"

மதனவல்லி இக்கடிதத்தை எழுதி முடித்தபின் இதை மடித்து தன் வலது ஜேபியில் வைத்துக்கொண்டு வேருெரு கடிதம் எடுத்து ஸர்தார் சூரிய நாயகருக்குப் பின்கண்டபடி எழுதினுள்:—

"என் பிரிய நண்பர்க்கு:—

தங்களுக்கு இச்சீட்டை எழுதுவதாய் வாக்களித்தேன். ஏன் இதைக் கடிதத்தில் எழுதத் தீர்மானித்தேனெனில் நான் கூறவெண்ணும் சங்கதியைத் தங்கள் முகத்தின் முன் கூற நாணமாயிருக்கிறது. நான் தங்கள் காதலை யேற்றுக்கொள்கிறேன். இராவிற்கு என் கணவர் தயார்செய்து கொடுக்கும் பானம் சற்று போதையாயிருக்கும். தாங்கள் அதில் கொஞ்சம் அதிகமாய் அருந்திவிட்டதாய் அபிநயம் செய்து இங்கேயே இராவிற்குச் சயனம் செய்யவேண்டுமென்று கூறினால் என் கணவன் இங்கே தங்களுக்கு ஒரு அறை யளித்துவிடுவார். நான், அந்த வெள்ளை மன்மதன் சிலை வைத்திருக்கிறதே, அதன் எதிரிலிருக்கும் அறையில்தான் சயனித்துக் கொள்வது. அங்கு நான் தனியாகவே யிருப்பேன். பின்னும் விவரம் கூறவேண்டுவதில்லை. மற்றவை இருவரும் சந்தித்த பின்,

மதனவல்லி"

இக்கடிதத்தையும் மடித்து மதனவல்லி தன் இடது ஜேபியில் வைத்துக்கொண்டு அறையை விட்டுப் புறப்பட்டு இளவரசன் முதலியோர் விளையாடிக் கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றாள்.

அச்சமயம் யாவரும் தங்கள் ஆட்டத்தில் கண்ணுங் கருத்துமா யிருக்கிறார்கள். அதே சமயம் செல்லப்பனும் தான் செய்த பானத்தைத் தயார் செய்துவிட்டு, அங்கு வந்ததால், குமாரவேல் பிரபு மரியாதையாய் அவனுக்குத் தன் இடத்தை யளித்து வெளியில் எழுந்து வந்தான்.

செல்லப்பன் உடனே உட்கார்ந்து ஆட்டத்தில கலந்து கொண்டான். இதனால் மதனவல்லிக்குத் தன் கடிதத்

தைக் கொடுக்க சமயம் வாய்ந்தது. உடனே குமாரவேல் பிரபுவிடம் ஒரு ஜேபியிலிருந்த கடிதத்தை யெடுத்து யாரும் காணக்கூடாத விதமாய்க் கொடுத்துவிட்டாள். அப்பிரபு இரண்டு நிமிடங்களில் அதை இரகசியமாய் வாசித்தறிந்ததும் சொல்லொணு வானந்த மடைந்துவிட்டார்.

மதனவல்லி யவன் முகக்குறியால் நமது கடிதத்தை இவன் வாசித் தறிந்துகொண்டு சந்தோஷ மடைந்துவிட்டான் என்று கருதிக்கொண்டாள்.

சற்றுநேரங் கழித்து ஸர்தார் சூரிய நாயகமும் தன் ஆட்டத்தை விட்டு எழுந்து வெளி கிளம்பினர். அதைக் கண்ட இளவரசர், குமாரவேல் பிரபுவை நோக்கி "நீர் வந்து அவர் இடத்தில் அமர்ந்து ஆட்டத்தைத் தடைப்படாமற் செய்யும்" என்ருன்.

இம்மொழிகள் இனி பட்டத்திற்கு வரப்போகிற இளவரசன் வாக்கினின்றும் வந்ததால் அவை யொருவித கட்டளை போன்றே கருதப்படவேண்டும். ஆகையால் அப்பிரபு அப்படியே ஆட்டத்தில் போய்ச் சேர்ந்துகொண்டார்.

இதனல் மதனவல்லி தன் மற்ருெரு கடிதத்தைச் சர்தாருக் களிக்க நல்ல சமயம் கிடைத்தது. அவள் யாவர் நாட்டமும் ஆட்டத்தில் இருக்கும் சமயம் பார்த்து மற்ருெரு கடிதத்தை யெடுத்து ஸர்தாரிட மளித்துவிட்டு அப்போது இரவு மணி பதினென்றுக்கு மேலாய் விட்டதால் நேராய்த் தன் அறைக்குச் சென்ருள்.

நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிக் கூறுவது அநாவசிய மல்லவென்று கருதுகிறேம். அதாவது நாம் எவ்வளவோ தந்திர சாமர்த்தியத்தோடு நமது கருத்தை முடித்துக்கொள்ள முயல்கிறேம். அந்தோ! நமது பிராரப்த வினையின்படி நீதியோடு அவ்வினைகளைப்

பூட்டி வைப்பவன் ஒருவன் உளன் என்பதையும், அவன் அமைப்பின்படி யாவும் நடக்குமே யன்றி அவற்றினின்று தப்பித்துக்கொள்ள முடியாதென்றும் பெரும்பாலோர் கருவதில்லை. நாம் நமது எண்ணத்திற் கிசைந்தபடி நமது கோரிக்கையை நிறைவேற்றிக்கொள்ள எவ்வித தந்திரமான வழிகளில் பிரவேசிக்கிறோமோ அதே வழிகளால் ஆண்டவனும் நம்மைப்பற்றி தன் விருப்பத்தை நமது மூலமாகவே நிறைவேற்றிக் கொள்கிறான். அந்தோ அது மட்டுமோ! நமது முயற்சி வியர்த்தமாய்விட்ட குற்றத்தை நம் தலைமீதே சுமத்துகிறான்.

நேயர்களே! இச்சந்தர்ப்பத்தில் மதனவல்லி ஏதோ ஒரு முக்கிய காரியத்தைச் செய்யத் தன் மனதில் தீர்மானித்துக்கொண்டு அதே கவலையா யிருக்கையில் பிரபுவும் ஸர்தாரும் வலியச் சென்று அவள் நட்பைக் கோரினார்கள். அவள் மிக்க தந்திர சாமார்த்தியங்க ளுடையவளாதலால் இச்சந்தர்ப்பத்தைத் தனக்கு அனுகூலமாக உபயோகித்துக் கொள்ளத் தீர்மானித்து அவர் இருவர்களை எவ்வளவு தந்திரமாய் மயக்கிவிட்டா ளென்பதை மேலே கூறி யிருப்பதா லுணரலாம். அவள் இருவர்க்கும் இரகசியச் சீட்டுகள் எழுதி யளித்தபோதிலும் அவள் பார பட்சத்தோடு நடந்து கொள்கிறாளென்றும், அதாவது ஸர்தார் சூரியநாயகம் விஷயத்தில் அவளுக்குச் சற்று உண்மையான அன்பே யிருக்கிறதென்றும் பிரபுவின்மேல் உண்மையில் அவளுக்கிருப்பது வெறுப்பும் கோபமுமே யெனினும் மேலுக்கு மட்டுமே அவர்மேல் அன்புடையவள்போல் சுயகாரியார்த்தமாய் அபிநயம் செய்கிறாளென்றும், அப்பிரபுவை மறுநாள் காலை பத்து மணிக்கும், ஸர்தாரை மட்டும் அந்த இரவே தன் படுக்கை யறைக்கு வரும்படிக்கும் அவள் வரைந்த கடிதங்

களால் நன்கு விளங்குவதைக் காணலாம். ஆயினும் அவள் கபட எண்ணம் எவ்விதமாய் நிறைவேறும்படி ஆண்டவன் விரும்புகிருரோ என்பதைப் போகப்போகக் காணலாம்.

மதனவல்லி தன்னறைக்குச் சென்றதே அவ்வளவு நேரமாகியும் அவளுக்கு நித்திரை வரவில்லை. அவள் மனது ஆயிரம் பேய் வீடுகளடங்கிய ஒரு சிறு ஊர்போல் இருந்தது. அவள் கலவரம் ஒரு வழியிலில்லை. தீராத் துயரமும், கிலேசமும், சுயவெறுப்பும், அவமானமும் அவள் மனதைப் பிய்த்துத் தின்றுகொண்டிருந்தன. அவளால் கூடியவரையில் சமாளித்தும் மனத்துயரை யடக்க முடியவில்லை. கடைசியில் "ஆம் அழுதே தீரவேண்டும். வேறு வழியில்லை" என்று மனதிற்குள் தீர்மானித்துக் கொண்டு அவ்வாறே மஞ்சத்தில் சாய்ந்து தாராளமாய்க் கண்ணீர் விட் டழுதாள்.

நேயர்காள்! உலகில் சாதாரணமாய்த் துயரடைந்தவர்கள் கண்ணீர்விட் டழுவதை நாம் சாதாரணமாய்க் காண்கிறோம். ஆனல் துயரத்திற்கு ஆண்டவன் அதை யொரு ஔடதமாய் அமைத்திருக்கிறுன் என்பதை யனேகர் அறிந்து கொள்வதில்லை. திடீலென்றுண்டான துயரத்திற்கு தற்கால சாந்தியான ஔடதம் கண்ணீரை வடித்தலே. அதிலும் என்றும் தீராததாய்த்தோன்றும் சகியாத் துக்கத்திற்கு வேறொரு ஔடத மிருக்கிறது. அது காலமேயாகும்.

ஸ்திரீகள் மட்டுமல்ல. ஆடவர்கள்கூடத் திடீலென்று ஒரு துக்க சம்பவம் நேரின், அதை யடக்கமுடியாமல் தேம்பித் தேம்பித் யழுவதையும் பிறகு அவர்கள் துக்கம் அச்சமயம் தணிவதையும் பிறகு அனுபவமாய்க் காணலாம். என்றும் நீங்காத துயரமும் காலத்தால் தணிக்கப்படுகிறது.

கணவனிடம் பூரண விசுவாசமுடைய மனைவியோ, தன் ஏக புத்திரன்மேல் பிராணனையே வைத்திருக்கும் தாயே னும் தந்தையேனும் அக்கணவனாவது மைந்தனாவது இறந்த நிமிஷம் அத்துயரத்தைச் சகிக்கமுடியாமல் உடனே தற் கொலை புரிந்துகொள்ளத் துணிந்து கிணற்றில் விழவோ, கழுத்தில் சுருக்குக் கயிறு மாட்டிக்கொண்டு தூக்கிற்போட் டுக்கொள்ளவோ பதைக்கிறார்கள். அச்சமயம் யாரும் அவர்களைக் கவனிக்காம லிருந்துவிட்டால் அவர்கள் உண் மையில் அப்போதிருக்கும் ஆத்திரத்தால் தற்கொலை செய்து கொள்வார்கள் என்பது நிச்சயம்.

ஆனால் அச்சமயம் மட்டும் யாரேனும் அவர்களைத் தடுத்துவிட்டால் உடனே நெஞ்சு வெடிக்கும் வண்ணம் அழுகிறார்கள். அதனால் அந்த ஆத்திரம் தணிந்து போகி றது. பிறகு கொஞ்சகாலம் சென்றால், அவர்களே மேற் கண்டவர்கள் மரிப்பதன் முன் எப்படி யிருந்தார்களோ அவ்வாறே யாரிடமும் சம்பாஷித்துக்கொண்டும் நகைத் துக்கொண்டும், கணவன் புத்திரன் முதலியவர்களுடைய மரணத்தைப் பற்றி ஓர் பழங்கதைபோல் மற்றவர்களிடம் கூறுவதையும் காணலாம். கடவுள் எவ்வளவோ தயவோடு காலம் என்ற ஔஷதத்தை அமைத்திருக்கிறார்.

ஆகையால் மதனவல்லி சற்றுநேரம் தாராளமாய்க் கண்ணீரைச் சிந்தி யழுதபின் தன் மனத்துயரம் ஒருவாறு தணிந்தவளாய், ஆசனத்தை விட்டெழுந்து முகத்தைக் கழு விக்கொண்டு தன் அறையிலிருந்த ஒரு பீரோவைத் திறந்து, அதிலிருந்த மிக்க அழகியதும் விலையுயர்ந்ததும், தந்தம், முத்துச்சிப்பி, இரத்தினங்கள் முதலியவை பதிக்கப்பட்டது மாகிய ஒரு சந்தன மரப்பெட்டியை யெடுத்து ஒரு தங்கச்

சாவியால் அதைத் திறந்து, அதிலிருந்த ஒரு கடிதக் கட்டை யெடுத்தாள்.

அதைக் கையிலெடுத்ததே அவள் முகத்தில் மிக்க அதிசயமான ஒருவித மாறுதல் உண்டாயிற்று. அக்கட்டையெடுத்துக்கொண்டு மஞ்சத்தில் உட்கார்ந்து, கட்டையவிழ்த்து அதிலிருந்த கடிதங்களை ஒவ்வொன்றாய் வாசித்தாள். அச்சமயம் அவள் முகம் பலவிதமான மாறுதல்களை யடைந்தது. அவள் ஆழ்ந்த சிந்தனையோடு எல்லாக் கடிதங்களையும் வாசித்து முடிந்தபின், அவற்றை முன்போல் பெட்டியில் வைத்து பீரோவை மூடிப் பூட்டிக்கொண்டு ஆசனத்திலமர்ந்து தன் அந்தரங்கத் தோழியை யழைத்தாள்.

தன் எஜமானி கூப்பிட்டவுடனே ஒரு விநாடியில் எதிரில் வந்து நிற்கும் அக்கன்னிகை யச்சமயம் உடனே வரவில்லை. மதனவல்லி மறுபடி இரண்டாந்தரம் கூப்பிட்ட பின்பு அவள் அவசரத்தோடு வந்து, "அம்மா! என்னை மன்னிக்கவேண்டும். நான் முன்னமே வந்திருப்பேன்; ஆனால் தங்கள் தந்தை ஒரு கட்டளையிட்டார். அதாவது ஒரு விருந்தினருக்கு-பெரிய மனிதர்களில் ஒருவருக்கு இரவிற்கு இங்கேயே சயனிப்பதற்காக ஒரு அறையை ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டார்" என்றாள்.

மதன:—எனக்கு உன்மேல் சற்றேனும் கோபமேயில்லை. அப்படியாயின் விருந்தினரில் ஒருவர் இங்கு தங்குவதாய்த் தெரிகிறது. அவர் யாரோ?

தோழி:—"அவர் பெயரை எஜமான் கூறவில்லை. அவர் அவசரத்தோடு "ஒரு விருந்தினர் இங்கே சயனித்துக் கொள்வார். அவருக்கு அந்த மீதி யறையை யாயத்தம் செய்" என்று கூறிவிட்டுச் சென்றார். அதனால் தான் நான் வர ஆலசியமாயிற்று" என்றாள்.

மதன:—“சரி, யாரா யிருந்தாலும் இருக்கட்டும். எனக்கு உடம்பு சுகமில்லை. ஆகையால் காலைப்போஜனம் இங்கு படுக்கையிலே எடுத்துக் கொள்வேன். இதுமட்டும் காலையில் வேலைக்காரனுக்கு ஒரு கட்டளையிட வேண்டும். நான் மறந்துவிட்டாலும் மறந்துபோவேன் ஆகையால், ‘காலையில் சரியாய்ப் பதினொரு மணிக்கு என்னை யார் காணவருவதாயினும் அவர்களை யுடனே என் படுக்கை யறைக்கு அழைத்து வந்துவிட வேண்டும்’ என்று கட்டளையிட்டதாகக் கூறிவிடு” என்றாள்.

தோழி அப்படியே செய்வதாகக் கூறினாள்.

தன் தோழி சென்றபின் மதனவல்லி உற்சாகத்தோடு சுறுசுறுப்பாய் எழுந்து தன் உடுப்பில் பல மாதிரியையும் நகைப்பெட்டியையும் எடுத்து,தன் வனப்பு காண்போர் கண்களை யுடனே மயக்கும் வண்ணமாய் ஆடையாபரணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு மிக்க ஆவலோடு ஸர்தார் சூரிய நாயகத்தின் வரவிற்காக ஆவலோடு எதிர் பார்த்திருந்தாள். நெடுநேரம் காத்து அவள் மனம் சலிக்கும் சமயம் அறையின் கதவு திறக்கப்பட்டதும் உள்ளே யாரோ ஒரு ஆடவன் வருவதை யுணர்ந்ததே அவன் ஸர்தார் என்றே யெண்ணிக்கொண்டாள். ஆயினும் தான் படுக்கை யுடையி லிருப்பதால் மிக வெட்க மடைந்து மஞ்சத்தின்மேல் போய் படுத்துக் கண்களைக் காத்தால் மூடிக்கொண்டாள்.

ஆனால் நேயர்களே அடுத்தநிமிடம் தான் சிக்கிக்கொண்டிருக்கும் ஆள் ஸர்தார் அல்லவென்றும் குமாரவேல் பிரபுவென்றும் அறிந்ததே அவள் மனதிலுண்டான ஏக்கமும், துடிப்பும், திகிலும், கலவரமும் சொல்லமுடியாது. ஆயினும் சூக்கும அறிவுடையவளாதலால் தவறு நேர்ந்த காரணம்

இன்னதென் றறிந்துகொண்டாள். அதாவது கடந்த இரவு இவள் இருவர்க்கும் எழுதிய கடிதங்களில் ஒன்றில் கூட மேல் விலாசம் வரையவில்லை. ஆகையால் அவசரத்தோடு அக்கடிதங்களை இருவர்க்கு மளிக்கும்போது கவனப் பிசகால் ஒருவர் கடிதத்தை யொருவர்க்குத் தவறாய் மாற்றிக் கொடுத்துவிட்டாள். காரியம் மிஞ்சிவிட்டது. இனி என்ன செய்வது. கடைசியில் சமயோசிதப்படி நடந்து கொள்வதே நலமென்று கருதி அப்பிரபுவின் பிரியத்திற் கிணங்கி விட்டாள். மற்ற விஷயங்களை இதை வாசிப்போர்களே யூகித்துக் கொள்ளும்படி விட்டுவிடுகிறோம். ஒன்று மட்டும் கூறுகிறோம். அதாவது இளவரசன் அன்றிரவு அங்கு தங்குவதாய்க் கூறியது பொய்யே. மதனவல்லி தன் கணவன் அந்த இரவு தன் படுக்கை யறைக்கு வாராதிருப்பதற்காக அவ்விதத் தந்திரம் செய்தாள். குமாரவேல் பிரபு பொழுது விடிந்ததும் எட்டு மணிக்குமேல் இரகசியமாய் அந்த அறையை விட்டு வெளிப்பட்டு இரவு தனக்கு அமைக்கப் பட்ட அறைக்குச் சென்றான்.

அவன் சென்றதே மதனவல்லி எழுந்து தன் தோழியை யழைத்து நேர்த்தியான உடைகளாலும் மிக்க விலையுயர்ந்த ஆபரணங்களாலும் தன்னை யலங்கரித்துக் கொண்டு ஸர்தார் சூரிய நாயகத்தின் வருகையை எதிர் பார்த்திருந்தாள். சரியாய்ப் பதினொரு மணிக்கு ஸர்தார் அறைக்குள் வந்தார். மதனவல்லி அவரை மிக்க அன்போடு வரவேற்றாள். ஸர்தாருக் குண்டான சந்தோஷத்திற்கு அளவே யில்லை. மதனவல்லி மிக்க தந்திரமாய் அவரை மயக்கக்கூடிய வார்த்தைகளை யுபயோகித்துக் கடைசியில்,

"ஓ என் அன்பரே! தங்கள்மேல் உண்மையில் எனக்கு எள்ளளவு சந்தேகமுங்கிடையாது.நான் தங்கள் உதவியைக்

கோருகிற விஷயம் மிக்க இரகசியமானது. அதை நான் ஒருவருக்கு வெளியிடுவதாயின், யாருக்கு என் அன்பை யளிக்கலாகுமோ, அவர்களிடந்தான் அத்தகைய இரகசியத்தைக் கூறக்கூடும்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட ஸர்தார், "நான் சத்திய மாய்க் கூறுகிறேன். நீ, நான் செய்யவேண்டியது இன்ன தென்று கூறவேண்டியதே தடை. அதை எத்தகைய கஷ்டமானதா யிருந்தாலும் சரி, அதற்காக என் பிராணனையே தத்தம் செய்யவேண்டி யிருந்தாலும் சரி, அதைச் செய்தே தீர்வேன்" என்றார்.

மதனவல்லி உள்ளத்தில் மிக்க சந்தோஷ மடைந்து "தாங்கள் செய்வீர்களென்று எனக்குப் பூரண நம்பிக்கை யுண்டு" என்று கூறிக்கொண்டே எழுந்து சென்று அறையின் ஒரு மூலையிலிருந்த பெட்டியைத் திறந்து அதிலிருந்த ஒரு கடிதக்கட்டை யெடுத்துவந்து ஸர்தாரிடம் கொடுத்து, "இதை வாசித்துப் பாருங்கள்" என்றாள்.

ஸர்தார் அவ்வாறே அக் கட்டிலிருந்த ஒவ்வொரு கடிதத்தையும் வாசித்துப் பார்த்தார். அதன்பின் அவர்களுக்குள் நடந்த சம்பாஷணையைப் பற்றி நாம் இங்கு கூறவேண்டுவதில்லை. ஏனெனில் பின்னால் நடக்கும் சம்பவங்களால் அச்சம்பாஷணை நன்கு விளங்கிவிடும். ஆகையால் இவ் விஷயத்தை இவ்விடத்திலேயே நிறுத்துகிறோம்.

---

சென்னை-600 028
186545

# 68 - வது அத்தியாயம்.

இப்போது சுகசிங்கம் பிரபுவின் மாளிகையில் மிக்க உன்னதமாய் அலங்கரிக்கப்பட்ட ஒரு அறையில் நடக்கும் சம்பவங்களைக் கவனிக்கவேண்டியது நமது கதையின் தொடர்ச்சிக்கு அவசியமா யிருக்கிறது.

அந்த அறையில் அப்பிரபுவின் சகோதரன் புத்திரியாகிய தெய்வயானை நல்ல நாணயமான உடைகளை யணிந்து கொண்டு, நவரத்தினங்க ளிழைத்த ஆபரணங்களால் தன்னை யலங்கரித்துக்கொண்டு, மிக்க அன்பும் கபடமற்ற உள்ளமும் உடையவள்போல் புன்சிரிப்போடு பிரகாசிக்கும் மலர்ந்த முகத்தோடு ஒரு சோபாவில் அமர்ந்திருக்கிறாள்.

அவள் எதிரில் நமது கோமளவல்லி யுட்கார்ந்திருக்கிறாள். உண்மையாகவே களங்கமற்ற உள்ளமும், குற்றமென்பதையே அறியாத மனமும், கள்ளங் கபடற்ற தன்மையும் உடைய தன்மைக்கும், தெய்வயானையின் உண்மை மனோநிலைமைக்குமுள்ள நேர்மாறான வித்தியாசத்தைச் சாதாரண மனிதர் கண்டறிய முடியாது.

இவர்கள் இருவரும் அங்கு உட்கார்ந்திருக்கும்போது பகல் பனிரண்டு மணியிருக்கும். கோமளவல்லி முன்னாள் மாலைதான் சுகசிங்கம் பிரபுவோடு கூட அவர் மாளிகையில் வந்து தங்கினாள். அந்தோ உலகத்தில் நடக்கும் சூதுவாதுகளும், அக்கிரமங்களும், படுமோச நயவஞ்சகச் செயல்களும் எள்ளளவேனு மறியாதவள். ஆகையால் அப்பிரபு தன்மேல் புத்திரி வாஞ்சை வைத்துத் தனக்கு மிக்க கருணையோடு உதவி செய்யவே தன்னை அங்கு அழைத்துவந்திருக்

கிருர் என்று நம்பி இருக்கிருள். அவள் தன் காதலனுகிய ஜகதீசன் தனக்குத் துரோகம் செய்தான் என்று அவள் நம்பும்படி அப்பிரபு செய்த தந்திர சாமர்த்தியங்களால் அவ் விஷயங்களையெல்லாம் அவள் உண்மையென்றே நம்பிக் கொண்ட விஷயம் முன்னமே நண்பர்கள் அறிந்திருக்கிறீர் கள். மேலும் தெய்வயானையின் கணவனுக்கு நேர்ந்த கோர மான மரணத்தைப்பற்றி பிரபு மூலமாய் முன்னமே கேள் விப்பட்டிருப்பதால் அவள்மேல் கோமளத்திற்கு மிக்க இரக் கம் உண்டாகி யிருந்தது. அதனுல் சுலபமாய் அவளுடைய தந்திர வார்த்தைகளுக்கு மயங்கி அவள் மிக்க உத்தமியென் றும் தன்மேல் பூரண இரக்கமும் அன்பும் வைத்திருக்கிரு ளென்றும் நம்பிக்கொண்டாள். இதனுல் தெய்வயானைக்கு அக் கன்னிகையை ஏமாற்றுவது மிக்க சுலபமாயிற்று. தெய் வயானை கோமளவல்லியை நோக்கி,

"சகோதரியே! என் பெரிய தந்தையின் வருகைக்கு நீ ஆவலோடு எதிர்பார்க்கிருயல்லவா?" என்ருள்.

**மதன**:—நான் காண மிக்க ஆவல்கொண்டிருக்கும் என் தமக்கையைக் கண்டு ஆலிங்கனம் செய்துகொள்ள எவ்வளவு காதல்கொண் டிருப்பேன்.

**தெய்வ**:—உன் தமக்கை வசிக்குமிடம் இன்னதென்று இன் னம் சந்தேகத்தி லிருக்கிறது. ஆயினும் என் பெரிய தந்தை போய் ஒருமணி நேரமாய்விட்டது. சீக்கிரத் தில் வந்துவிடுவார். ஏன் இந்நேரம் ஆலசியமோ எனக்கு விளங்கவில்லை. உன் தமக்கை முன்பு பச்சை யப்பப்பிள்ளை குடும்பத்தோடு இருந்ததாய்க் கூறின யல்லவா?

**கோமள**:—"ஆம். அவர்கள் அந்தவீதியில் 20-வது நம்பரில் வசித்துக்கொண் டிருந்தார்கள்" என்ருள்.

இதைக்கேட்ட தெய்வயானை மிக்க வியப்படைந்து "அந்த வீடோ? அதில் அருமைநாதம் பிரபு குடும்பத்தார் வசித்து வந்தார்களே!" என்றாள். தெய்வயானை இப்பெரிய நகரத்தில் அதே பெயருடைய வேறு வீதிகளுமிருக்கலா காதா? என்றாள். தெய்வயானை "அது எந்த வீதியா யிருந்தாலும் பிரபு கண்டு பிடித்துக்கொண்டு வருவார்" என்றாள்.

இதைக் கேட்டதே கோமளவல்லி சற்று திருப்தி யடைந்தாலும் ஒரு சமயம் தான் தன் மூதாட்டியாகிய அத்தையைக் கந்தபுரியில் விட்டு விட்டு வந்திருப்பதற்காக எங்கே தன் தமக்கை கோபித்துக் கொள்வாளோ வென்று சிந்தித்தாள்.

அச்சமயம் தெய்வயானையும் தன் பெரிய தந்தை கூறிய படுமோசமாகிய சதியாலோசனையை எப்படி நிறை வேற்றுவதென்று கலவரத்தோடு சிந்தனை செய்தாள். கோமளத்தின் களங்கமற்ற பரிசுத்த உள்ளத்தின் தன்மையை யறிந்தபின், அப்படிப்பட்டவளை துர்கடக்கைக்குச் சம்மதிக்கச்செய்வது மிக்க கஷ்டமாயிற்றே என்று அவளுக்குக் கலவர முண்டாயிற்று. மறுத்துவிடவோ முடியாது. ஏனெனில் தன் பெரிய தந்தை இவ்விஷயத்தில் எத்தகைய பாதகத்திற்கும் அஞ்சாதவனென்றும், அவனுடைய மற்ற அக்கிரமங்களும் யாவும் அவள் நன்கறிவாள். அதோடு தான் தன் கணவனுக்குத் துரோகம் செய்ததும், அவன் தூக்குத் தண்டனை யடையும்படி தான் செய்த நயவஞ்சகச் செய்திகளும் யாவும் தன் பெரிய தந்தைக்கு தன்மூலமாகவே நன்ருய்த் தெரியும் என்றும் அவள் அறிவாள். மேலும் தன் பெரிய தந்தை கோமளத்தைத் தன் வசம் ஒப்பித்துச் செல்லும்போது, "நான் இக்கன்னிகையை என்னத்திற்காக இவ்

கழைத்து வந்தேனென்பது உனக்கு நன்ருய் விளங்கி யிருக்கும். இவள் உலக அநுபவ மறியாதவள். நான் இவளிடம் காதலைப்பற்றி பிரஸ்தாபிக்கத் தொடங்கும்போது இவள் பயந்து மிரட்சி யடையாமல் விருப்பத்தோடு என் மொழிகளை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் நீ இவள் மனதைப் பக்குவப் படுத்திவிட வேண்டும். இதைப்பற்றி நான் உனக்கு அதிகமாய்க் கூறவேண்டியதில்லை" என்று சொல்லிவிட்டுச் சென்ருர். இவை யாவும் சிந்தித்த தெய்வயானை நாம் பேசாமல் பிரபுவின் பிரியப்படி நடப்பதே நலமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டு, கோமளவல்லியை நோக்கி,

"என் பிரியமான சிநேகியே! நீ இப்படித் துயரத்தோடு முகவாட்ட மடைந்திருப்பது எனக்கு மிக்க மனவருத்தமா யிருக்கிறது" என்ருள்.

கோமளம்:—"அந்தோ எனக்குத் தீராத்துயரத்தை யுண்டாக்கத் தக்க விஷயங்கள் எவ்வளவோ என் மனதிலிருக்கின்றனவே!" என்ருள்.

தெய்வ:—உண்மையில் அத்தகைய துயரத்தை யுண்டாக்கும் விஷயம் ஒன்றுமே யில்லை. நீ கருதி யிருக்கும் அவ்வாலிபனே எள்ளளவும் உன் அன்பிற்குப் பாத்திரனல்லாத சுத்த அயோக்கியன்.

இம்மொழிகள் இதுகாறும் அவள் கூறிய இரக்கமும் பரிதாபமுமான வார்த்தைகளுக்கு நேர்மாறு யிருந்தன. இம்மொழிகளைக் கேட்ட கோமளவல்லி, "அந்தோ! நீ இந்த விஷயத்தைப் பற்றி இவ்வளவு அலட்சியமாய்க் கூற வேண்டாம்" என்ருள்.

தெய்வ:—"சிநேகியே! நான் உன் மனதிற்கு வருத்தமுண்டாக்க வேண்டுமென்ற எண்ணமே எனக்கில்லை.

நான் கூறவந்ததெல்லாம் கூடி ஒரு நன்மையைப் பற்றியே; அதாவது, நீ வீணாய்க் காதல் வைத்த அந்த வாலிபனைவிடத் தகுதியானவர் வேறு பலர் இருக்கிறார்களென்பதை நீ யறியவேண்டு மென்பதே" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட கோமளவல்லியின் மனம் பதைத்துவிட்டது. ஆயினும் அவள் தன் மனதிலுள்ள கவலைகளை யெல்லாம் ஒருவாறு அடக்கிக்கொண்டு தெய்வயானையை நோக்கி, "இப்படி யின்னும் வேறு யாராவது கூறி யிருந்தால் அவர்கள் என்னை யவமரியாதை யாகவாவது, என் நடக்கையை இழிவானதாகவாவது கூறினார்களென்றே கருதுவேன்" என்றாள்.

தெய்வயானை அன்பான குரலோடு, "சினேகியே! நான் உலக அனுபவமறிந்த அனுபவத்தால் இம்மாதிரி உண்மையைக் கூறினேனே யன்றி உன் மனதிற்கு வியாகூல முண்டாக்க வேண்டுமென்றல்ல. புதிதாய் வஞ்சனைகிய ஒரு காதலனால் ஏமாற்றப்பட்ட கன்னிகைகள் உன்னைப் போல்தான் நினைப்பது. நீ இன்னும் கொஞ்சநாட்கள் இந்நகரத்தில் வசித்தால் காதல் என்பது வெறும் வாய்ச்சொல்லேயென்று நன்றாய் உணர்ந்துகொள்வாய். நான் கூறும் ஒரு திருட்டாந்தத்தை மட்டும் தயவு செய்து கேள்.

மிக்க அழகு பொருந்திய மதனவல்லி என்பவள் இந்நகரிலுள்ள செல்லப்பன் என்பவனை மணம் புரிந்துகொண்டு சரியாய் இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. இப்போது அவள் கணவன் ஒரு பிரபு பட்டமளிக்கப்பட்டு இளவரசன் அரண்மனையில் பிரதம காரியஸ்தர் வேலையில் அமர்ந்திருக்கிறான். அவன் மனைவியாகிய மதனவல்லி ஒரு சீமாட்டி

யாய்விட்டாள். அவள் கணவன் பதவிக்குத் தக்கபடி இருவரும் இளவரசன் மாளிகையின் ஓர் பாகத்திலேயே வசிக்கிறார்கள். செல்வவந்தர்களாகிய பெரிய பிரபுக்களெல்லாம் அவர்கள் நட்பை அடைய மிக்க ஆவலோடு முயற்சி செய்வதோடு அதற்காக மிக்க பொருட்செலவும் செய்கிறார்கள். இவ்வளவும் எதனா லுண்டாயிற்றென்று நினைக்கிறாய். சாதாரணமாய் நாட்டில் ஒருவீட்டில் வசித்துக்கொண்டிருந்த அவர்களுக்கு இராஜமாளிகையில் போய்ச்சேரும்படியான நற்காலம் எதனால் வந்தது? வேறொன்றுமில்லை. முதலில் இருவரும் காதலினாலேயே மணம் செய்துகொண்டிருக்கலாம். பிறகு உலக அனுபவமறிந்து கௌரவத்திற்கும், செல்வாக்கிற்கும், மேலான போகபாக்கியங்களை அனுபவிக்கவும் துணிந்து அக்காதலை யொருபக்கம் அடக்கிவிட்டார்கள். உண்மையை ஒரு வார்த்தையிற் கூறிவிடுகிறேன். செல்லப்பப் பிரபுவின் மனைவியாகிய அந்த மதனவல்லி யென்பவள் இரகசியத்தில் இளவரசனுடைய வைப்பாட்டியாய் விட்டாள். இளவரசன் மாதர் விஷயத்தில் மிக்க அயோக்கியமான நடக்கை யுடையவனென்று நீ கேள்விப்பட்டிருக்கலாம்......'' என்றதே,

கோமளவல்லியின் பரிசுத்தமான மனம் அதற்கு மேலும் கேட்கச் சகியாமல், அவள் மனம் துடித்து வெறுப்பும் கோபமும் அடைந்து, தெய்வயானையை நோக்கி ஆத்திரத்தோடு,

"அம்மா! போதும். போதும். இன்னும் அதிகமாய் ஒன்றும் கூறவேண்டாம். இந்த அழகுபொருந்திய பிரக்யாதிபெற்ற நகரத்திற்கு அலங்காரத்தை யுண்டாக்குகிறவர்கள் இந்த மதனவல்லியைப் போன்றவர்களாயின், இங்குள்ள செல்வவந்தர்களாகிய சீமான் சீமாட்டிகள் விஷயத்

தில் நான் கொண்டிருக்கும் கௌரவமும் மரியாதையும் அடியோடு போய்விடும். அந்தோ! இத்தகைய மாடமாளிகைகள் நிறைந்த செல்வம்பொருந்திய நகரத்தில் ஒருவினாடியேனும் இருப்பதைவிட மிக்க வறியோர் வசிக்கும் ஒரு குக்கிராமத்தில் வாழ்நாளைக் கழிப்பதே நலம். என்வரையில் கந்தபுரியிலுள்ள எங்கள் குடிசையில் நிம்மதியும் பரிசுத்தமுமான மனதோடு ஏழைச் சீவனம் செய்துகொண்டிருப்பதே தேவபோகமாகும்'' என்றாள்.

தெய்வயானை இம்மொழிகளைக் கேட்டுத் திகைப்பும் வியப்பும் அடைந்து இதற்கு எப்படி நாம் பதில் கூறுவதென்று சிந்தித்தாள். அச்சமயம் அறையின் கதவு திடீலென்று திறக்கப்பட்டதும் சுகசிங்கம் பிரபு அறைக்குள் வந்தார்.

கோமளவல்லி அவரைக் கண்டதே மிக்க ஆவலோடு “பிரபுவே! என்ன சமாசாரம்?'' என்றாள்.

பிரபு:—“கொஞ்சம் பொறுமை, பொறுமை. உன் தமக்கை விலாசத்தில் கண்ட வீதியிலே அதே வீட்டில் அதே மனிதர்களோடுதான் வசிக்கிறாள். ஆனால் அவர்கள் தற்சமயம் நகரை விட்டு வெளியில் எங்கோ சென்றிருக்கிறார்கள். வேலைக்காரரைக் கேட்டால் அவர்கள் சென்ற இடம் தெரியாதென்றும் இன்னும் ஒரு வாரத்தில் வருவார்களென்றும் கூறுகிறார்கள். ஆகையால் நீ கொஞ்சம் பொறுத்துக்கொண் டிருக்கவேண்டும்'' என்றார்.

இதைக்கேட்டு கோமளவல்லி மிக்க வியாகூலமடைந்து, “அந்தோ! நான் மிக்க துர்ப்பாக்கியவதி யென்று முன்னமே கூறவில்லையா. நான் மகா பாபியாயிற்றே. எப்படி யிருந்தாலும் நான் இன்னும் ஆலசியம் செய்யமுடியாது. இது

காறுமே வயோதிகமுடைய கிழவியாகிய அத்தையை அதிக காலமாய் நிராதாவான நிலைமையில் விட்டுவிட்டு வந்திருக்கிறேன். இனி நான் ஒருநாள் கூட ஆலசியம் செய்யலாகாது. என் தமக்கையைக் காணமற் செல்ல மிக்க துயரமா யிருந்தாலும், மனம் பொறுத்துக்கொண்டு உடனே என் அத்தையைக் கவனிக்கக் கந்தபுரிக்குத் திரும்பவேண்டியதே. எந்தவிதத்திலும் துயரத்தை யனுபவிக்க வேண்டுமென்று என் வினைப்பயன் இருக்கிறது. அதைத் தடுக்க யாரால் முடியும்?'' என்றாள்.

பிரபு:—நான் கூறுவதைச் சற்று கேள். நீ யிங்கு வந்து என் ஆதரணையைக் கோரியது முதல் நான் உனக்கு நல்ல யோசனைகளையும் புத்திமதிகளையுமே கூறி யிருக்கிறேன் என்று முன்பு நீயே யியம்பினை. இப்போதும் அவ்வாறே நான் கூறுவதைச் செய். பதாத காரியம் சிதறுது ஆகையால் ஆத்திரப்பட்டு ஒன்றும் செய்யாதே. நீ வீட்டில் விட்டு வந்திருக்கும் கன்னிகை உனது அத்தையை மிக்க அக்கரையோடு பாது காத்து வருவாள் என்று உனக்கே நன்றாய்த் தெரியும். உன் தமக்கை நகரத்திற்குத் திரும்பி வருமட்டும் பேசாமல் இங்கேயே யிரு. அம்மாதைக் காண வென்றே நீ இதுகாறும் காத்திருந்தாய். இவ்வளவு தூரம் வந்தபின் அவளைக் காணமல் திரும்பி விடுவாயேல் அம்மாது அவசியம் உன்மேல் மிக்க கோபமடைவாள் என்பது உண்மை. என் வீட்டில் நீ சுகத்தோடு நிம்மதியா யிருக்கலாம். மீனும்பாள் ஒரு சமயம் என்னைப்பற்றி யேதேனும் கெடுதியாய்க் கூறியிருந்தாலும் நான் உன் நன்மையையே கோருகிறவனென்று நீ நன்கறிவாய்.

கோமளம் சற்றும் சூதுவாது கபடம் முதலிய தீய குணங்களை யறியாதவளேனும், பிரபு கூறிய மேற்கண்ட வாக்கியங்களில் எதிலோ அவளுக்குக் கொஞ்சம் சந்தேகத்தை யுண்டாக்கிவிட்டது. அது எதுவென்று அவளுக்கே விளங்கவில்லை, காரணமும் விளங்கவில்லை. அப்படியிருந்தும் திடீலென்று அவள் மனதில் திகிலும் சந்தேகமும் உண்டாய்விட்டது மட்டும் உண்மையே. அதனால் மீனும்பாள் இப்பிரபுவைப் பற்றி கந்தபுரியில் தன்னிடம் கூறிய விஷயங்கள் அனைத்தும் ஏககாலத்தில் குபீலென்று அவள் மனதில் உதித்தன. அதோடு பரிதிபுரத்திற்குப் பிரபுவும் தானும் சென்றுகொண் டிருக்கையில் பிரபு தன்னைச் சிற்சில சமயங்களில் ஒருவிதமான பார்வையாய்ப் பார்த்தது நினைப்பிற்கு வந்தது. இதுமட்டு மல்ல; சற்று முன்பு தெய்வயானை தன்னிடம் சம்பாஷித்துக்கொண் டிருக்கையில் கூறிய சில சங்கதிகளின் விபரீதக் கருத்து அப்போதுதான் அவள் மனதில் உறுத்தியது. உடனே அவளுக்குண்டான சந்தேகமும், திகிலும் நிச்சயமாய்விட்டன.

கோமளவல்லி தன் மனக்கலவரமனைத்தும் அடக்கிக் கொண்டு பிரபுவை நோக்கி,

"பிரபுவே! தாங்கள் எனக்குச் செய்த உதவிகளை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். நான் இங்கு வந்து கொஞ்சகாலமே யாகியும் இச் சகோதரி என் மனதைத் தேற்றக் காட்டிய அன்பையும் நான் என்றும் மனதில் வைத்திருப்பேன். என் நன்றி ஒருபோதும் குறையாது. ஆகையால் சமயோசிதத்தை யனுசரித்து நான் நடந்துகொள்ளும் மாதிரியால் தாங்கள் என்னை வித்தியாசமாய் நினைக்கலாகாது. இப்போது எது எப்படியாயினும் நான் இன்னும்

இங்கு தாமதிக்காமல் உடனே கந்தபுரிக்குச் செல்லவேண்டும்'' என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட பிரபு உள்ளத்தில் மிக்க கலவரமடைந்து, "கன்னிகையே! நீ அப்படி நினைக்கலாகாது—இல்லை இல்லை கருதலாகாது—இல்லை—உண்மையாகவே நான் ஒப்பமாட்டேன்...." என்றார்.

கோமளா:—"பிரபுவே!'' என்று கூறிக்கொண்டே, ஒரே பிடிவாதங் கொண்டவள்போல் தன் ஆசனத்தை விட்டெழுந்து "நான் இனி எக்காரணத்தாலும் ஆலசியம் செய்யாமல் கந்தபுரிக்குச் செல்வதென்று தீர்மானித்துக் கொண்டேன். இன்னும் சரியாய் ஒரு மணியாகவில்லை. தாங்கள் தயவு செய்து தங்கள் வேலைக்காரரில் ஒருவரை அனுப்பி ஒரு வண்டி அழைத்து வரும்படி ஏற்பாடு செய்வீர்களாகில் மிக்க வந்தன மளிப்பேன்'' என்றாள்.

அச்சமயம் தெய்வயானை கோமளத்தை நோக்கி:—

"என் பிரியமான சிநேகியே! நீ அவசரமாய் இப்படிப் புறப்படுவது—திடீலென்று புறப்படுவதாய்த் தீர்மானிப்பது நன்றாயில்லை. ஏனெனில் இதனால் நீ எங்கள் மேல் வெறுப்பு கொண்டாய் அல்லது எங்களை நம்பவில்லையென்று ஐய்யுறச் செய்கிறது'' என்றாள்.

கோமளா:—"சிநேகியே! என் ஆத்திரத்தால் கடமையையனுசரித்து இப்படி நான் நடப்பதற்காக நீ என்னை வேறுவிதமாய்க் கருதுவது தகாது. நீங்கள் எனக்குச் செய்த நன்றி அதிகம். அங்கு நான் உடனே புறப்பட்டுச் செல்லும்படி உதவி செய்தால் என் உயிருள்ளமட்டும் இந்நன்றியை மறவேன்'' என்று கூறிவிட்

டுத் தானே எழுந்து சென்று வேலைக்காரனை யழைக்கும் மணியை யடித்தாள்.

அவள் அப்படி எழுந்து சென்றபோது பிரபுவும் தெய்வயானையும் குறிப்பாய்ச் சம்பாஷித்துக்கொண்டதில் "இவள் சாதாரண வழிக்கு வருகிறவளல்ல" என்று இருவரும் உணர்ந்து கொண்டார்கள் என்று தெரிந்துகொள்ளலாம். கடைசியில் பிரபு தன்னைக் குறிப்பாய்ப் பார்த்து செய்த செய்கையால் "இவளைக் கடினமான வழியில் இணங்கும்படிச் செய்தே தீரவேண்டும்" என்று அவர் கூறியதாகத் தெய்வயானை அறிந்துகொண்டாள்.

மணிச் சத்தத்தைக் கேட்டவுடன் வேலையாள் அறைக்குள் வந்தான். கோமளம் அவனை நோக்கி, கந்தபுரித் தபால் வண்டி புறப்படும் ஆபீசுக்குச் செல்ல ஒரு வண்டி பேசிக்கொண்டு வா!" என்றாள். அவன் அப்படியே கொண்டு வருகிறேன் என்று தலை நிமிர்ந்து செல்லும்போது, பிரபு தன்னைப் பார்த்து காட்டிய குறிகளால் அவன் வண்டி பேசி வரவேண்டாம் என்று கூறுவதாக உணர்ந்துகொண்டான்.

கோமளம் உடனே தெய்வயானையை நோக்கி "இனி நான் என் அறைக்குச் சென்று பிரயாணத்திற்கு ஆயத்தமாகிறேன்" என்றாள்.

தெய்வ:—"செய். நீ புறப்படுகிறதாய்த் தீர்மானித்துவிட்டவரையில் நானும் வந்து என்னால் கூடிய உதவியைச் செய்ய இதோ வருகிறேன்" என்றாள்.

கோமளம் அறையை விட்டுச் சென்றதே பிரபு தெய்வயானையை நோக்கி, "நான் பருதிபுரம் சென்றிருந்தபோது, தானப்பன் என்னும் போக்கிரிப் பயல் கள்ளத்தனமாய்

வீட்டில் அந்த இரகசிய அறைகளில் ஒளிந்துகொண்டிருந்த தாகவும், நீயும் இளவரசனும் தற்செயலாய் அங்கு சென்ற போது அவன் அங்கிருக்கும் சூத்திர நாற்காலிகளிலொன் றில் சிக்கிக்கொண்டிருந்தானென்றும் கூறினையல்லவா? அதோடு இளவரசன் அவனுக்குக் கைக்கூலி கொடுத்து உன் கணவனைக் கடைசி வரையில் தந்திரமாய் ஏமாற்று வதற்காக ஏற்பாடு செய்ததாகவும் கூறினையல்லவா?" என்ருர்.

தெய்வ:—"ஆம் ஆம். தாங்கள் இப்போது அந்த விஷ யத்தைப் பற்றிக் கூறுவதன் கருத்தென்ன?" என்ருள்.

பிரபு:—"நான் கூறுவதைக் கேள். நீ உன் சுயகாரியத்திற் காக அந்த அறையை ஒருமுறை உபயோகப் படுத் திக்கொண்ட வரையில் இப்போது என் பொருட்டாக ஒருதரம் அந்த வேலையைச் செய்யவேண்டும். எப் படியாவது அப்பெண்ணைத் தந்திரமாய் வசியம் செய்து அந்த அறைக்கு அழைத்துக் கொண்டுபோய் அந் நாற்காலியில் சிக்கிக்கொள்ளச் செய்யவேண்டும்" என்ருர்.

தெய்வயானை இம்மொழிகளைக் கேட்டதும் திப்பிரமை யும் திகிலு மடைந்து "அந்தோ! அவள் சுத்த பரிசுத்த மானவள். விவகாரமே சற்று மறியாதவள்......" என்ற போது,

பிரபு சிடுசிடுப்போடு:—"எனக்கு அதெல்லாம் தெரியாது. அவள் என் கையிலிருந்து தப்பித்துக்கொள்ளப் பார்க் கிருள். அப்படி விட்டுவிட என்னுல் முடியாது. ஆகை

யால் நீ எப்படியாவது நான் கூறியபடி செய்யவேண்டும்'' என்றார்.

தெய்வ:—"சரி, அப்படியே செய்கிறேன். ஒருசங்கதி கேட்கிறேன். தாங்கள் அதன் உண்மையை மட்டும் கூற வேண்டும். தாங்கள் முன்பு கூறிய மாதிரியால் கோமளவல்லியின் தமக்கை விஷயத்தில் ஏதோ மர்மம் இருப்பதாய் எனக்குத் தெரிந்தது. அதன் விஷயமென்ன? தயவு செய்து கூறவேண்டும்'' என்றாள்.

பிரபு:—"ஆ! இவள் தமக்கையின் மர்மமா? ஆம் ஆம். அதைப்பற்றி பெரிய ஆச்சரியமான இரகசியமேயிருக்கிறது. அது மிக்க வியப்பே. நான் பிறகு அதைக் கூறுகிறேன். அதைக் கேட்டதே நீ என்னிலும் மிக்க வியப்படைந்து விடுவாய். இதோ அந்த இரகசிய அறையின் சாவி" என்று சாவியை யவள் கரத்தி லளித்தார்.

தெய்வயானை உடனே சாவியை எடுத்துக் கொண்டு போய் இரகசிய அறையைத் திறந்து வைத்துவிட்டுத் துரிதமாய்க் கோமளவல்லி யிருக்கும் அறைக்குச் சென்றாள்.

---

## 69 - வது அத்தியாயம்.

கோமளவல்லி தன் அறைக்குச் சென்றதும் பிரயாணத்திற்கு ஆயத்தம் செய்தாள். இனிமேலுங் கூட பிரபு தன் பிரயாணத்திற்குத் தடை செய்வாரென்று அவள் சற்றும் நினைக்கவில்லை. ஆயினும் இந்த விடத்தை விட்டு வெளிப்பட்டுவிட்ட பிறகே நாம் க்ஷேமமென்று நம்பினாள்.

தெய்வயானை கோமளத்தைக் கண்டதும் மிக்க அன்புடையவள் போலும், கோமளத்தின் பிரிவிற்கு ஆற்றாதவள் போலும் மிக்க சாமார்த்தியமாய் அபிநயம் செய்து,

"சகோதரியே! நீ எப்படி எண்ணிக்கொண்டாலும் சரி, நீ என்னைப் பிரிந்துபோவ தென்னமோ என் மனதிற்குச் சொல்லொணு வியாகூலத்தைத் தருகிறது. என் பெரிய தந்தை கூட அதற்கே விசனப்படுகிறார். நீ சென்றபின் உன் தமக்கையின் வரவைக் கவனித்துக்கொண்டிருந்து நீ காத்திருந்து கடைசியில் உன் அத்தையின் ஆபத்தைக் கருதி செல்லத் துணிந்ததைக் கூறி உனக்கு உடனே உன் தமக்கையின் வரவைப்பற்றி தெரிவிக்கும்படி தீர்மானித்துக் கொண்டிருக்கிறார்...." என்றாள்.

கோமளவல்லி சுத்தமாய்ச் சூது வாது, கபட சிந்தனை யெதையும் அறியாதவள். உலகத்தின் துஷ்ட நடவடிக்கைகள் கொஞ்சம்கூட அவளுக்குத் தெரியாது. உலக அனுபவங்களை யறிய அவளுக்குச் சந்தர்ப்பம் நேரிட.வே யில்லை. ஆகையால் தெய்வயானை பேசிய மாயஜால வார்த்தைகளால் அவள் அடியோடு மயங்கிப்போய் பிரபுவின்மேல் அவளுக்கிருந்த சந்தேகத்தைக் கூட இப்போது "நாம் நினைத்தது

தவருக யிருக்கவேண்டும்'' என்று எண்ணிக் கொண்டாள். அதனுல் தெய்வயானை மேல் மிக்க அன்புடையவளாய் அவளை நோக்கி,

"சகோதரியே! நீயும் பிரபுவும் எனக்குச் செய்த அரிய உதவிக்காக நான் எவ்வளவோ நன்றியுடையவளா யிருக்கிறேன். என் ஆயுள்வரை இதை மறவேன்....'' என்றதே,

தெய்வ:—"சகோதரியே! அதைப்பற்றி யொன்றும் கூற வேண்டாம். நீ புறப்பட வேண்டிய காலம் நெறுங்கி விட்டது. ஆச்சு இன்னம் அரைமணி நேரத்தில் வண்டி வந்துவிடும். நீ என்னை விட்டுப் பிரியப்போவதால் என் பிரியத்திற் கிணங்கி இச்சமயம் என் அறையில் உட்கார்ந்து என்னேடு கொஞ்சம் சிற்றுண்டி யருந்திச் செல்லவேண்டும்'' என்ருள்.

இத்தகைய அன்பார்ந்த வேண்டுகோளுக்கு யார்தான் மறுத்துக் கூறுவார்கள். கோமளம் அதற்கிசைந்ததும் தெய்வயானை இவளை அழைத்துக்கொண்டு இரகசிய அறைக்குச் சென்ருள். இடையிலுள்ள அறைகளின் விவரங்களைக் கோமளம் கவனிக்கும்படி அவள் அவகாசம் கொடுக்கவில்லை. கடைசியில் இருவரும் இரகசி யறைக்குள் நுழைந்ததே அந்த அறை நன்ருய் அலங்கரிக்கப்பட்டுப் பிரகாசமாய்த் தீபங்கள் ஏற்றப்பட்டிருந்தது. ஒரு மேஜைமேல் சிற்றுண்டிகளும் பழ வர்க்கங்களும் வைக்கப்பட் டிருந்தன.

தெய்வயானை கோமளத்தை நோக்கி, "அடடா! என்ன தப்பிதம் செய்துவிட்டார்கள்! சகோதரியே! இது என் அறைக்கு முன் இருக்கும் அறை. அந்த முட்டாள்களுக்கு நான் அவ்வளவு கூறி யிருந்தும் அவர்கள் ஆகாரத்தை யிங்கு வட்டித்து விட்டார்கள்'' என்ருள்.

கோமளா:—"அந்தோ அதனுல் ஒரு கெடுதியும் நேரிட வில்லை. எங்கே சாப்பிட்டாவென்ன" என்ருள்.

தெய்வயானை "உட்கார் உட்கார்" என்று அங்கு போடப்பட்டிருந்த சதிக்கார நாற்காலிகளில் ஒன்றை மிக்க பரிவோடு காட்டினுள்.

பாபம் கள்ளங் கபடறியாத கோமளம் "சரி சீக்கிரம் நாம் இதை விட்டு வெளிப்பட்டு விடுவோம். இனி நமக்கு ஒரு ஆபத்து மில்லை. நாம் இதுகாறும் வீணுய்ச் சந்தேகப் பட்டு பீதி யடைந்திருந்தோம்" என்று கருதி சந்தோஷத் தோடு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவள் உட்கார்ந்ததும் பின்னுல் கிளிக் என்ற சத்தம் கேட்டதும் அவள் புயங்களும் காங்களும் நாற்காலியோடு சேர்த்து இரும்பு வளையங்களால் பிணிக்கப்பட்டன. நேயர் களே! அச்சமயம் அவளுக்குண்டான பிரமையும் திகிலும் எப்படி யிருக்குமென்பதை இதை வாசிப்போரே யுணர லாகும். ஆயினும் அறிவாளி யாகையால் ஒகோ நாம் தந் திரமாய் மோசம் செய்யப்பட்டோம் என்று உணர்ந்து கொண்டாள். அவளுக்குண்டான திகிலால் இரண்டொரு நிமிடங்கள் வாய் திறக்கக்கூடாமல் மருட்சி யடைந்த மான் போல் விழித்துக்கொண் டிருந்தாள். ஆனுல் அச்சமயம் தெய்வயானை ஒரு பக்கம் சுவரில் மறைவா யிருந்த ஒரு கதவைத் திறந்துகொண்டு வெளியில் செல்வதைக் கண்ட தும் கோவென்றலறினுள். மறு நிமிடம் தாழ்வாரத்தின் பக்கமா யிருந்த கதவைத் திறந்துகொண்டு பிரபு தன் எதி ரில் வந்து நிற்பதைக் கண்டாள்.

கோமளம் மிக்க திகிலும் துயாமும் அடைந்து மனே வேதனையைச் சகிக்கமுடியாமல் மிக்க சோர்வடைவதைக்

கண்ட பிரபு "ஆ! நாம் இப்போது இவள் மனதைக் கிளரி விடலாகாது. இவள் சீக்கிரம் அதிக சோர்வினால் ஸ்மரணை யிழந்துவிடுவாள். அப்புறம்..." என்று தனக்குள் சிந்தித் கொண்டார்.

தெய்வயானை கோமளத்தை விட்டுச் சென்றதும் நோய் இரோஜா அறைக்குச் சென்று அங்கிருந்த ஒரு நாற்காலியில் சாய்ந்துவிட்டாள். அவள் செய்த நயவஞ்சகப் படுமோசம் அவள் மனச் சாட்சியில் முள்போல் தைத்தது. அதிலும் தன் போன்ற ஒரு பெண்-உலக அனுபோக மறியாதவள்-தங்களிடம் உதவிக்காக வந்து அடைக்கலம் புகுந்தவள்-தன்னைப் பூரணமாய் நம்பியவள் - அப்படிப் பட்டவளுக்குத் தான் செய்த படுமோசச் செய்கை அவள் மனதிற்குப் பெரிய நரக வேதனையை யுண்டாக்கிவிட்டது. மிக்க துன் பத்தை யனுபவித்துக்கொண்டு அங்கு உட்கார்ந்திருந்தாள். ஆயினும் அப்படியே நெடுநேரமிருக்க அவளுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. ஏனெனில் இரண்டொரு நிமிடங்களுக் குள் ஒரு வேலைக்காரன் அவளிடம் வந்து "அம்மா ஸர்தார் சூரியநாயகம் என்பவர் வந்திருக்கிறார். இந்த க்ஷணமே பிரபுவையாவது தங்களையாவது கண்டு பேசவேண்டுமாம்" என்றான்.

தெய்வயானை நாங்கள் இருவரும் வீட்டிலில்லை என்று சொல்லிவிடு என்று வேலைக்காரனிடம் கூற வாய்திறக்கப் போனாள். ஆனால் அச்சமயம் வேலைக்காரன் பின்னாலேயே மெதுவாய் வந்துகொண்டிருந்த ஸர்தார் அறைக்குள் வந்து விட்டார். வேலைக்காரன் உடனே வெளியில் சென்றான். ஸர்தாரின் துணிகரச் செயலைக் கண்ட தெய்வயானை என்ன தான் மிக்க துணிகரமும் தைரியமுடையவளாயினும் அச் சமயம் திகிலினால் மிக்க மனக்கலக்க மடைந்துவிட்டாள்.

ஸர்தார் ஏதோ ஒரு காரியத்தைச் சாதிக்கவேண்டு மென்ற தீர்மானத்தோடு பேசத் தொடங்கியவர்போல், "சீமாட்டியே! நான் இவ்வளவு அவசரமாய் நடந்து கொள் வதற்காக என்னை மன்னிக்கவேண்டும். நான் மிக்க அவ சர விஷயமாய்ப் பிரபுவை ஒரு விநாடிகூட ஆலசியம் செய் யாமல் காணவேண்டும்" என்றார்.

தெய்வயானையின் முகத்தில் உடனே மிக்க நாணத் தோடு கூடிய பெரிய விகார முண்டாய்விட்டது. அவள் ஸர்தாரை நோக்கி "பிரபு ஒரு முக்கியமான வேலையா யிருக் கிறார்" என்றாள்.

ஸர்தார் "அப்படியாயின் இப்போது இங்கு தங்கி யிருக்கும் கோமளவல்லி என்னும் கன்னிகையை நான் இந்த நிமிடமே கண்டு பேசும்படி ஏற்பாடு செய்யவேண் டும்" என்றார்.

இம்மொழிகளைக் கேட்டதே தெய்வயானை திகிலடை ந்து குற்றமுள்ள நெஞ்சாகையால் முகம் வேறுபட்டுக் கல வர மடைந்து, தன்னை யறியாமலே இரகசிய அறைகளுக் குச் செல்லும் வாசற்படியை நோக்கினாள்.

ஸர்தார் பிரபுவின் நெருங்கிய நண்பர்களில் ஒருவாராத லால் அந்த அறைகளையும் அவற்றைப் பற்றிய விஷயங்களை யும் நன்கறிவார். இப்போது தெய்வயானை யடைந்த திகில் கலவரம் பீதி முதலியவற்றையும் கவனித்தார். ஆகையால் அவருக்கு மிக்க சந்தேக முண்டாய்விட்டது. அவர் இவள் முகக் குறிகளையும் நோக்கங்களையும் மிக்க உன்னிப்பாய்க் கவனித்துக்கொண் டிருந்தார். அவள் முன்னமே பிரபு ஏதோ முக்கியமான வேலையிலிருக்கிறார் என்று கூறியதை யும் இப்போது அவள் பார்வை சென்றதையும் கண்டதே,

பிரபு அந்த இரகசிய அறையிலிருக்கிறதா யுணர்ந்தார். பிரபுவின் நடக்கை தனக்கு நன்ருய்த் தெரியுமாகையால் மிக்க மோசமான விஷயம் நடைபெறுகிறதென்று தெரிந்து கொண்டார். உடனே அவர் தெய்வயானையை நோக்கி,

"என் நண்பர் இரகசிய அறையிலிருக்கிருர் என்று அறிந்துகொண்டேன். எனக்கு அங்கு செல்ல வழி தெரியுமாதலால் உன் அனுமதியின்மேல் நான் உடனே அவரைக் காணப்போகிறேன் என்று எழுந்து புறப்பட்டார். தெய்வயானை சொல்லொணுத் திகிலடைந்து "தாங்கள் இப்படி ஒரு ஸ்திரீயிடம் முரட்டுத்தனமாய் நடப்பது பெரிய மனிதற்கு அழகல்ல" என்ருள்.

ஸர்தார்:—"இச்சமயம் நான் வேணுமென்று அப்படி நடப்பதாய் நீ கருதலாகாது. யாவற்றையும் சிந்திக்க அங்கே அதிருப்தியான தகாத விவகாரம் நடப்பதாகவே தெரிகிறது. நீ அங்கு நான் செல்லக்கூடாதென்று தடுத்தால் அத்தகைய அநீதத்திற்கு நீயும் உடந்தையாயிருப்பது நிச்சயமென்றே நான் கருதவேண்டும்" என்ருர்.

இதைக் கேட்டதே தெய்வயானை ஒன்றுங் கூறமுடியாமல் மனமுடைந்து ஆவி சோர்ந்து ஆசனத்தில் அப்படியே சாய்ந்துவிட்டாள். ஸர்தார் அவள் நிலைமையைக் கண்டதும் தான் கருதியவை யாவும் உண்மையேயென்றுணர்ந்து துரிதமாய் இரகசிய அறையை நோக்கிச் சென்ருர்.

இதற்கிடையில் சுகசிங்கம் பிரபு கோமளவல்லியின் நிலைமையை நோக்கி அவள் சீக்கிரத்தில் ஸ்மாணை யிழந்து விடுவாளென்று மிக்க ஆவலோடு அவளெதிரில் நின்று

அவள் கட்டழகை யாவலோடு நோக்கிக்கொண்டே, "ஆச்சு சீக்கிரத்தில் மூர்ச்சை யடைந்துவிடுவாள், நமது ஆவலைத் தணித்துக் கொள்ளலாம்" என்று சிந்தித்துக்கொண் டிருந்தார்.

அச்சமயம் கோமளவல்லி திடீலென்று பூரண ஸ்மாணை யடைந்து திகிலோடு கண்களைத் திறந்து நாற்புறங்களிலும் நோக்கினுள். அந்த இடத்தையும், தன் நிலைமையையும், பிரபு தன் எதிரில் காதற் பார்வையோடு நிற்பதையும் கண்டதே சற்று முன்பு நடந்த சம்பவங்களும் கவனத்திற்கு வரவே தன் முழு ஆபத்தும் அவள் மனதிற்கு நன்கு விளங்கிவிட்டது. உடனே அலறிக் கூவினுள்.

பிரபு:—"ஏ முட்டாள் பெண்ணே! நீ என்ன கூவினுலும் சற்றும் பயனில்லையென்று முன்னமே கூறினேனல்லவா? நீ பேசாமல் என் பிரியத்திற்கிணங்கிவிடு. எனக்குத் திரண்ட செல்வமிருக்கிறது. யாவும் நீ யனுபவிக்கலாம். நீ என்னிடமிருந்து தப்பித்துக்கொண்டு போக முடியாது:......" என்றதே.

கோமளம் மிக்க திகிலடைந்து மறுபடி மறுபடி அலறிக் கூவத்தொடங்கினுள். அதே நிமிடம் அந்த அறையின் கதவு தடாலென்று திறக்கப்பட்டதும் சர்தார் சூரியநாயகம் பிரபு எதிரில் வந்துநின்றதும், பிரபு கழுத்துப்பட்டையைத் தன் கரங்களால் பற்றிக்கொண்டு "இந்த வினுடியே இக்கன்னிகையை விடுதலை செய்துவிடவேண்டும்" என்று கூறினர்.

பிரபு திடுக்கிட்டு திகிலடைந்து "ஆ! என் பழைய நண்பனு என் பிரியத்திற்கு இடையூறுசெய்யக் கருதுகிருய்?" என்ருர்.

ஸர்:—"வீண்பேச்சு ஒன்றும் வேண்டாம். நான் தீர்மானத்தோடு வந்திருக்கிறேன். இந்த நாற்காலியின் சூத்திரமெல்லாம் எனக்குத் தெரியாதவையல்ல. உடனே இக்கன்னிகையை விடுதலைசெய்" என்றார்.

பிரபு பேசாமல் எழுந்து, கரங்கள் நடுங்கிக்கொண்டே நாற்காலியின் சூத்திரத்தைத் திருப்பினர். உடனே கோமளம் விடுதலை யடைந்து அடக்கமுடியாத சந்தோஷத்தோடும் நன்றியோடும் சர்தாரின் பாதங்களில் விழுந்துவிட்டாள். சர்தார் அவளை அன்போடு எடுத்து நிறுத்திப் பிரபுவை நோக்கி,

"உடனே இக்கன்னிகையைப் பேசாமல் என்கூட அனுப்பிவிட வேண்டும். அப்படிச் செய்தால் இவ்விஷயத்தைப் பகிரங்கத்திற்குக் கொண்டுவரமாட்டேன். இதற்கு ஏதாவது தடைசெய்தாலோ எல்லா சங்கதிகளும், கூட உமது சகோதரர் புத்திரியின் சங்கதியும் யாவும் வெளிக்குக் கொண்டு வரப்படும்" என்றார்.

பிரபு ஒன்றும் பேசாமல் அந்நிபந்தனைகளின்படி ஒப்பிக்கொண்டதே சர்தார் கோமளவல்லியை யழைத்துக்கொண்டு அந்த அறையைவிட்டு ரோஜா அறைக்கு வந்தார். அங்கு இருந்த தெய்வயானை அவமானத்தையும், துக்கத்தையும் சகிக்கமுடியாமல் தன் அறையிற்சென்று கதவை மூடிக்கொண்டாள்.

அங்கு வந்ததும் ஸர்தார் கோமளத்தை ஒரு நாற்காலியில் உட்கார வைத்துவிட்டு கற்பகவல்லி தன்னிடம் கொடுத்த கடிதத்தை அவளிடமளித்தார். கோமளவல்லி மிக்க ஆவலோடு அதை வாங்கி வாசித்தாள். அதில் கீழ்க்கண்டபடி எழுதப்பட்டிருந்தது:—

"என் பிரியமான தங்கையே! இக்கடிதம் கொண்டு வருகிறவரை நீ பூரணமாய் நம்பலாம். இவர் உன்னை இப்போது சிக்கிக்கொண்டிருக்கும் ஆபத்திலிருந்து உன்னை மீட்டு உடனே உன்னை நேராய் என்னிடம் கொண்டுவந்து விடுவார். உன் அன்பார்ந்த தமக்கை கற்பகவல்லி."

இதை வாசித்தபின் அவள் அடைந்த சந்தோஷத்திற்களவேயில்லை. "ஆ! அப்படியாயின் என் தமக்கை இங்குதான் வசிக்கிறுளென்று அப்பிரபு கூறியது மெய்தானே?" என்றாள்.

ஸர்:—"இவ் விஷயத்தில் அவர் உன்னை ஏமாற்றவில்லை. அவர் சற்று நேரத்திற்கு முன் அங்கு வந்திருந்ததால் தான் நீ அவரிடம் சிக்கிக்கொண்டிருக்கும் சங்கதி உன் தமக்கைக்குத் தெரிந்தது. இன்றேல் நீ இந்நகரத்தில் வந்திருப்பதே தெரியாது.

கோமளவல்லி உடனே தன் உடைகளை எடுத்துக் கொண்டு ஸர்தாரின்கூடப் புறப்பட்டாள். சற்று நேரத்திற்குள் வண்டி கற்பகவல்லி வசிக்கும் மாளிகை யருகிற் சென்று நின்றது. கற்பகம், அம்மாளிகையின் மாடிமேல் ஒரு சாளரத்தின் எதிரில் நின்று தன் வரவை நோக்கி ஆவலோடு பார்த்துக்கொண் டிருப்பதைக் கண்டாள்.

* * * *

* * * * *

சற்று நேரத்திற்குள் சகோதரிகள் இருவரும் ஒருவரை யொருவர் ஆவலோடு ஆலிங்கனம் செய்துகொண்டார்கள். அச்சமயம் அவர்களுக்குண்டாகிய சந்தோஷத்தை இத்தன்மையதென யாவரால் கூறமுடியும். இருவர் கண்களிலும் ஆனந்த பாஷ்பம் சரமாரியாய்ப் பொழிந்தது.

ஆனல் அவர்கள் மனதிற் பொங்கிய சந்தோஷம் துயரக் கலப்பில்லா திருந்ததென நம்மால் கூறமுடியாது.

இருவரும் சந்தித்தலால் உண்டான சந்தோஷமும் மனக் கிளர்ச்சியும் சற்று தணிந்தபின் கோமளவல்லி தன் தமக்கையை நோக்கி "தமக்கையே! நான் கந்தபுரியில் அத்தையைத் தனியே அனுதையாய் விட்டுவிட்டு வந்தே னென்று நீ என்மேல் கோபம் கொண்டிருக்கிருயோ? ஆ! நான் இடையில் எனக்கு நேரிட்ட ஆபத்துகளில் சம யோசித புத்திகூற ஒருவரு மில்லாமல் பட்டகஷ்ட மிருக் கிறதே—கடவுளுக்கே தெரியும்" என்ருள்.

**கற்பகம்:**—"தங்கையே! உன்மேல் கோபம் செய்து கொள் வதா? ஒருகாலு மில்லை. நீ கூறிய சந்தர்ப்பங்களில் உனக்குப் புத்திகூற நான் அருகிலில்லாததற்காக மிக்க விசனப்படுகிறேன். ஆனல் இச்சமயம் உன்னைச் சந் தித்ததற்காக மிக்க சந்தோஷப்படுகிறேன். ஏனெனில் உன் மனதிலிருக்கும் பெரிய வியாகூலத்தை ஒழிக்க என்னிடம் மருந்து கிடைத்திருக்கிறது. உன் துய ரத்தை நீக்க என்னல் கூடுமென்பதற்காக நான் அளவு கடந்த சந்தோஷ மடைகிறேன்" என்ருள்.

இம்மொழிகளைக் கேட்ட கோமளவல்லி மிக்க வியப் படைந்து, "அய்யோ அக்கா! நீ கூறுவதென்ன? என் துன் பங்கள் இத்தகையவை யென்று உனக்கு விவாமாய்த் தெரி யாதே. நானும் வீணுய்ப் பன்முறை யாவற்றையும் உனக்கு விவாமாய்க் கடிதத்தில் எழுத முயன்றேன். என்னல் முடியவில்லை. ஏனெனில் அவற்றை உனக்கு அறிவித்தால் நிம்மதியாய் இருக்கும். உன் மனதில் ஈயத்தைக் காய்ச்சி யூற்றினதுபோ லிருக்கும். அந்தோ உனக்கு அத்தகைய துன்பத்தை யுண்டாக்க எனக்கு மனம் வாவில்லை. ஆகை

யால் அவற்றைப் பற்றி விபரமாய் நான் உனக்கு அறிவிக்காததற்காக என்னை மன்னிக்கப் பிரார்த்திக்கிறேன்'' என்ருள்.

கற்பகவல்லி தன் தங்கையை அன்போடு ஆலிங்கனம் செய்துகொண்டு பன்முறை முத்தமளித்து, “கோமளம்! நீ யெனக்கு அவற்றைப் பற்றிய விபரம் ஒன்றும் தெரிவிக்க வில்லை யென்று நான் உன்மேல் கோபித்துக் கொள்ளச் சற்றும் காரணமே யில்லை. ஏனெனில் எனக்கு எந்த வழியாகவோ எல்லா விவரங்களும் தெரியும். உன் துயரத்தை யொழிக்க முடிவாக ஒரு வார்த்தை கூறிவிடுகிறேன். அதாவது உன் காதலனுகிய ஜகதீசன் சுத்த நிரபராதியே'' என்ருள்.

இம்மொழிகளைக் கேட்ட கோமளம் சொல்லொணு ஆனந்தமும் வியப்பும் அடைந்து,

“என்ன அக்கா! என்ன கூறினை? நிரபராதியா? என் காதலன் நிரபராதியா? ஆ! நீ கூறுவதுமட்டும் உண்மையாயிருந்தால் ஆ ஆ! இதுமட்டும் மெய்யாயிருந்தால்..........'' என்ருள்.

கற்:—தங்கையே! இத்தகைய விஷயத்தில் உனக்கு எங்கேனும் நான் வஞ்சனைசெய்யக் கருதிப் பொய் கூறுவேனே. ஒருபோதும் அப்படி நினைக்காதே. நான் கூறுவது சந்தேகமற உண்மையே.

கோம:—ஆ! இது மெய்யாகவே மிக்க சந்தோஷமான சமாசாரமே. இந்த நன்றிக்கு நான் என்ன செய்யப் போகிறேன். நீ கூறும் மாதிரியால் உனக்கு அது நிச்சயமென்றே பூரண நம்பகமிருக்கிறதென்று தெரிகிறது.

கற்:—நான் கூறுவதைப் பூரணமாய் நம்பு. இவை யாவும் உண்மையென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியாவிட்டால் ஒருபோதும் இப்படிக் கூறமாட்டேன். உன் காதலன் நிரபராதி யென்பது மட்டுமல்ல. சத்தியவான். அவன் மிக்க அக்ரமங்களுக்கும் துன்பங்களுக்கும் ஆளாக்கப்பட் டிருக்கிறான். அவன் சிறை செய்யப்பட்டிருப்பதே அநீதமான வீண் சாக்கைக் காரணமாகக் கொண்டே யல்லது வேறில்லை. அவன் எவ்வளவோ தூண்டுதல்களுக்குச் சிக்காமல் தைரியமாய்த் தப்பித்துக்கொண் டிருக்கிறான்.

ஓ என் காதலரே! தங்களுக்கு எவ்வளவோ மனக் கவலையை யளித்துவிட்டேன். ஆயினும் நான் என்னசெய்வேன். சந்தர்ப்ப அத்தாட்சிகள் அவ்வாறிருந்தன. நான் எப்படி அவற்றை நம்பாமலிருப்பது. அதோடு ஒரு பெரிய இராஜ்ஜியத்தின் பிரதம போலீஸ் அதிகாரியே கூறுவதை எப்படி நான் நம்பாமலிருப்பது. அதோடு அம்மாது உன் மேல் காதல்கொண் டிருப்பதாய் வெளியிட்டபோது நான் காதால் கேட்டேனே...'' என்று பிரலாபித்தாள்.

கற்:—"தங்கையே! நீ வீண் கலவரங்களை யெல்லாம் மனதில் வைத்துக்கொண் டிருக்கிறாய். எனக்குப் பருதிபுரத்தில் நடந்த விவரங்கள் எனக்கென்னமோ தெரியாது. என்ன சங்கதிகள் நடந்ததாய்க் கூறினாலும் சரி, உன் காதலன் நிரபராதி, சத்தியவான், மாசில்லா மனமுடையவன் என்று நான் உறுதியாய்க் கூறுகிறேன். நீ கண்ட விஷயங்களெல்லாம் உன்னை ஏமாற்றுவதற்காக வென்றே ஒருவன் யோசனையோடு ஆயத்தம் செய்யப்பட்டு நடித்துக் காட்டப்பட்டவை. இப்போது நீ ரத்தினபுரியிலிருந்து புறப்பட்டுப் பருதிபுரம் சென்றபின் அங்கு நடந்த சங்கதிகள் யாவற்றையும் விவரமாய்க் கூறு பார்ப்போம்'' என்றாள்.

186545
...600 008

# மாதவி மாதவன் 2-பாகம்

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

## இரத்தினபுரி ரகசியம் 3-பாகம் விலை ரூபா 6

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

# ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு மூடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம்அவரை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி பிள்ளை, மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியனவாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# “ஆனந்தபோதினி”

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஆு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்ட மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-8-0 மாதிரிக்காப்பி இனாம்.

### ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 3-பாகமும் ... | 6 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும்... | 3 | 0 | ரத்தினாபாய் ... | 1 | 12 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| கனகபூஷணம்2பாகம்... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 10 |
| ஆனந்தஸிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மகனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.